அப்பனேநறுக்கியதிற்சொல்லக்கேளே. 124

## கேளசைகேண்கூடவிஷபாகம் போருமல் பெரும்வயிறுசோகைக்கு.

கேளப்பாபொட்டணம்போற்கட்டிக்கொண்டு
கிருபையுடன்மூன்றுநாள் நசியம்பண்ணு
வாளப்பாநல்லெண்ணெய்தேய்த்துக்கொள்ளு
மருக்காரைபட்டைகொண்டுமுழுகிவாநீ
சூளப்பாவொருபானைவென்னீராட்டி
கருதியுடன்மறுதினத்திலிரண்டாம்
பானைமூழ்கப்பாமூன்றுநாள்
மூன்றும்பானைமூழ்கிட்டவே பீனிசமுறிந்துபோமே. 125

போமப்பாவிஷபாகங்கவுசைகெண்டை
பொருமலுடன்பெருவயிறுசோகைபாண்டு
ஆமப்பாசொல்லுகிறேனவிழ்தங்கேளு
அப்பனேகுமட்டிச்சாற்படிதான்வாங்கி
வேமப்பாயிந்துப்புமிளகுசுக்கு
விதமாய்விராகனெடையைந்துசேர்த்து
வாமப்பாலோகமுடன் வாளரண்டு
வகையொன்றுக்கீரைந்து விராகன்கூட்டே. 126

கூட்டடாசடுக்காய்தானிடையைக்கேளு
கூரானவிராகனெடையொன்பதாக
ஆட்டடாசரக்கெல்லாம்பொடியாய்ச்செய்து
அப்பனேபேய்ப்பழச்சாற்படிதான்விட்டு
மாட்டடாபனைவெல்லம் அஞ்சுமூன்று
வகைசேரநறுக்கியதிலுலர்த்திப்போட்டு
காட்டடாலேகியம்போற்கிண்டிக்கொண்டு
கணபதியைப்பூசைபண்ணி கருதிக்கொள்ளே. 127

கொள்ளவேநோயாளிசரீரம்பார்த்து
கொடுத்துவிடுமுள்ளிக்காய்பிரமாணந்தான்
அள்ளவேபேதியதுகாணுஞ்சொன்னேன்
அப்பனேயொருநேரஞ்சாதங்கொள்ளு
தள்ளவேபுளிபுகையுமுப்பாகாது
தனிமேதைப்பாலமொருக்ரப்பனுகா
பள்ளவேபத்தியமாயுண்டுவந்தால்
பறக்குமடாநோய்க்கெல்லாம்பறக்கும்பாரே. 128

முகவாதத்திற்குத்தயிலம்.

வேறு.

பறக்குமடாமுகவாதங் கடுப்புதீரப்
பக்குவமாய்ச்சொல்லுகிறேன்பரிந்துகேளு
இறக்குமடாமண்தின்னும் பூநாகத்தை
பெரிக்கம்பால்நல்லெணெயிம்மூன்றும் கூட்டி
நிறக்குமடாவொவ்வொன்றுபடிகாலாக
நேரானதேங்காய்ப்பாலிருகால்கூட்டி

இறக்குமடாகல்வத்திலரைத்துக்கொண்டு
அப்பனேயடுப்பேற்றிக்காய்ச்சிடாயே. 129

காச்சடாமெழுகுபதம்வடித்துக்கொண்டு
கண்மூக்குமுகமதிலுங்கண்டத்தூணு
பாச்சிடாய்பகடு செய்தேக்கும்போதுபார்
மூன்றுதாம்பொழுதுபாம்ச்சியாட்டி
மேச்சிடயித்தயிலங்காணும்போதே
மேதினியில்முகவாதமெங்கேபோச்சு
தாட்சிவராதிம்மருந்தைச்செய்தால்
பாருதவருதுபோக்கொன்றுந்தப்பாதூட்டே. 130

நீரடைபுக்குடிநீர்
வேறு.

ஊட்டப்பாநீரடைப்புக்கவிழ்தங்கேளு
வுத்தமனேபொற்கடுக்காய்ஐந்தார்வாங்கி
கூட்டப்பாபொடிசெய்து வைத்துக்கொண்டு
குமரியுடன்சோற்றிலேபிரட்டிவைத்து
காட்டப்பாயிருள்ளிபடிகாற்போட்டு
கட்டாகயிடித்ததிலேபிசைந்துகொண்டு
நாட்டப்பாவடித்துகொண்டிறுத்துவாங்கு
நலமானவெண்காரம்பொரித்துப்போமே. 131

ஈளையிரும்ல்சுவாசத்துக்குபுகை.

போட்டடனேயிருமூன்றுகிராங்கொள்ள
புனிதமுடனீரடைப்புபோகும்போகும்
வாட்டடனேசயமீளையிருமல்கண்டால்
வகையானதிரிபுகைதான்சொல்லக்கேளு
பாட்டடனேபச்சைநொச்சிச்சாறும்வாங்கி
பரிவானசீலையிலேதுவைத்துவாட்டி
காட்டடனேசூதமரிதாரம்ரண்டு
கட்டாகப்பொடித்ததிலேபாத்திக்கேளே. 132

கேளப்பாதிரிகொளுத்திமூக்கில்வாங்
குகிருமையுடனிருமலெங்கேகெதிகெட்
டோடும் வாளப்பாயின்னமொருதிரிதான்

சொல்வேன் வளமான நாய்வேளை
மேனிவேரும் ஆளப்பாகொடிவேலிசாரணையுங்
கூட்டி அப்பனேவேருவகைசமனுய்க்கொண்டு
தாளப்பாவுள்ளியரிதாரங்கூட்டி
சமன்கொண்டுவெள்ளாட்டுப்பாலிலாட்டே. 133

ஆட்டியேமயனம்போலரைத்துக்கொண்டு
அப்பனேயிழைத்துணியிற்றபவிவாங்கி
யூட்டியேயுலர்ந்தபின் புதிரியாய்ச்செய்து
வுத்தமனேநல்லெண்ணெய்த்தீபமேற்றி
நாட்டியேமுன்னதாய்மோருஞ்சாரம்
நலமாகப்பொசித்தவுடன்குழாயில்வைத்து
காட்டியேசுவாசத்தில்புகையைவாங்கக்
கனமானசுவசமுடனிருமல்போமே. 134

வேறு.

போமடாதூதுவளைகண்டங்கத்திரிபுகழ்
முசுக்கைசாற்வகைக்குயீராழிவாங்கி
யாமடாபசுவினெயீராழி கூட்டி
அப்பனேகதிர்படத்திலொருநாள்வைத்து
நேமடாமிளகுதிப்பிலிதான்றிக்காய்
நெல்லிமுள்ளிசிற்றரத்தைகடுக்காய்சுக்கு
தேமடாசிறுநாகப்பூவோடொக்க
சிறுதேக்குவாய்விளங்கஞ்செவியங்கூட்டே. 135

தொண்டைப்புண்பகைச்சலீளக்குநேய்.

கூட்டுநீகடுக்காய் திப்பிலியின்மூலம்
கொடிவேலியதிமதுரங் கோஷ்டங்காயம்
மாட்டுவகைக்கீர்கழஞ்சுபொடித்துப்போடு
மைந்தனேபக்குவமாயெரித்துவாங்கி
மூட்டுநிதம்பலமொன்றுநாள்மூவைந்து
முன்விலங் குஞ்சயமுங் குத்திருமல்
வெட்டைமீண்டுங் தொண்டைப்புண்புகைச்சலீனை
தீரும்மீறுதேபுகைபத்தியமேசாரே. 136

## விப்புருதி அரையாப்புகண்டமாலைக்குபத்து.

### வேறு.

காருவிப்புருதியரையாப்புமாலை
 கனமானமருந்தொன்று சொல்லக்கேளு
நேருவெண்சாரணைவேர்பலமே வாங்கி
 நிரையாகமஞ்சள்கல்வத்திற்போட்டு
பாருநீபழச்சாற்றி லரைத்துக்கொண்டு
 பக்குவமாய்கட்டியிலுமேலும்பூசி
மாறு அவ்வேர் நறுக்கிவில்லைதட்டி
 மகத்தானவீக்கத்திற்கட்டிடாயே. 137

### வாந்திவிக்கல்.

கட்டிடவேபுண்புரையும் யாறிப்போகுங்
 கனமான வாந்திவிக்கல்கண்டுதானால்
தட்டியேசா திக்காய்கிராம்பு யேலந்தளமான
 வெண்காரமதுசஞ்சீனி மட்டியே
மாதளையின்பழமுங்கூட்டி வளமான
 விளாம்பழமுங்கடுக்காய்சேர்த்து
பிட்டிடபுங்குபத்திரிவேருங்கூட்டி
 புகழானமருந்தெல்லாஞ்சமனாய்க்கொண்டே. 138

### இடுப்புவலி.

கொண்டப்பாபாண்டத்திற்கியாழம்போடு
 கெடிதானகியாழத்தையிறுத்துக்கொண்டு
தண்டப்பாதேனதிலேவிட்டுக்கொள்ள
 தப்பாதுவாந்திவிக்கல் தள்ளிப்போகும்
கண்டப்பாயிடுப் பவலிக்கவிழ்தங்கேளு
 கனமானவுளுந்தெள்ளு அமுக்கராவேர்
பண்டப்பாவகையொன்று படிதூளாகப்
 பரிவானநல்லெண்ணெய்ப்படிதான் கூட்டே. 139

கூட்டியேயிதுவெல்லாங் கலந்துகொண்டு
 குமுறவேகாய்ச்சியதைக்கிண்டிவாங்கி

முட்டியேயிருமூன்று நேரங்கொள்ள
முதிர்ந்துவந்த யிடுப்புவலிகோரைவாய்வு
பக்கசூலைபறந்துபோந்தப் பாது
பற்றிப்பாரு ஊட்டியதோர்
பத்தியந்தானென்றுமாகா வுத்தமனே
வென்னீரில்பொதித்திடாயே. 140

## கால்கைசூலையெரிச்சல்காந்தலுக்குமூலக்கடுப்புவேட்கை.

பொசித்தவுடநீங்கிப்போமெரிவுபித்தம்
புகழானவுட்காச்சல்வுள்ளங்கைகால்
கசித்தவுடனெறியோடுகணணெரிவுகாந்தல்
கனமானசூலையெரிச்சலகன்றுபோகும்
உசிதமுடன்சட்டிகொண்டு அடுப்பிலேற்றி
உபாயமாய்ப்பழம்பத்துவதக்கிக்கொண்டு
நிசிதமுடன் பீங்கானிற்பிழிந்துகொண்டு
நிறைமூன்றுகாசெடை தான்மிளகுசேர்த்தே. 141

சேர்த்தப்பா மிளகதனைவறுத்துக்கொண்டு
திறமான கல்வத்திற்பொடியாய்ச்செய்து
பார்த்தப்பாசர்க்கரைமுன்னீரிற்போட்டு
பரிந்துகொண்டிருமூன்றுநேரங்கொள்ளு
கார்த்தப்பாவவிழ்தத்தைச்செலுத்துப்பாரு
கருத்துடனேபுளிகையுந்தள்ளிப்போடு
ஆர்த்தப்பாவறிவுகொண்டு செய்தாயானல்
அப்பவல்லோரோகமெல்லா மழிந்துபோமே. 142

### சீதக்கடுப்புக்குமருந்து.

### வேறு.

அழிந்துபோமூலமுடன் கடுப்புவேட்கை
யதிசீதங்கடுப்புடனே யிரத்தம்போக
ஒழிந்துபோமிதற்கு மொருபுகையைக்கேளு
வுத்தமனேபுளிப்பானே கொண்டுவந்து
வழுந்து போங்குழிவெட்டிபட்டையோட்டு

வளமாகத்தீயெரித்து தெருப்புண்டாக்கி
மொழுந் துவருமூங்கிலிலை வேட்பிலையும்போட்டு
மூர்க்கமுடன் மூலத்திற்புகையைக்காட்டே. 143

## மூலமுளைபோகமருந்து.

காட்டப்பாயிருமூன்று நேரம்போதுங்
கைகண்டபடிசொன்னேனின்னங்கேளு
மூட்டப்பாமூலத்தின்முளைதான்போக
முன்மூலம்பின்மூலமிரத்த மூலஞ்
சூட்டப்பாவராகத்தின்குடலைவாங்கி
சுத்திபண்ணி மூன்றுதரங்கழுவிப்போட்டு
ஆட்டப்பாபொரிபொரியாயரிந்துபோட்டு
ஐபனேபழச்சட்டியிலிட்டுக்கேளே. 144

## மூலக்கடுப்புமுளைக்குவேதுமருந்து.

கேளப்பாவடுப்பேற்றிவறுத்துகொண்டு
கெடியான ஆட்டுவெண்ணெய்தேங்காய்
மட்டும் வாளப்பாவதிலிட்டு வேகவைத்து
வளமானகுழம்புபோற்பாகங்கண்டு
சூளப்பா ஆரைந்துபழச்சாற்விட்டு
சுருதியுடன் வேகவைத்து குழம்புபோல
நாளப்பாநாற்பதுநாள்தின்பாயாகில்
மூலம்போமாய்ந்துபாரே. 145

## மூலத்துக்குமருந்து.

பாரப்பாநத்தை யெடுத்தாருருக்கு
ளடையதோர்பாண்டத்துளடைத்துக்கேளு
தீரப்பாவாய்மூடி யடுப்பிலேற்றி
தீமூட்டியாவிமேலெழும்பும்போது
ஏரப்பாயீரிருகாற்பலகைபோட்டு
யிருத்தியமேற்றளையதிலாசனத்தைவைத் ...

நேரப்பாவே துபிடிநாளிரைந்து
யிரததஞ்சீழ்மூலமுளைமூலம்போச்சே. 146

போச்சடா அவ்விறைச்சிவெளியேவாங்கி
பொடியாகச்செய்ததொருசட்டியிலேபோட்டு
பாச்சடாபலகாயம் பசுவினெய்தான்
பக்குவமாய் விட்டெரித்துப்பிரட்டிக்கொண்டு
மூச்சடாயரைநாலேந் துண்டைசெய்து
முனைந்தைந்து சந்தியிரண்டுண்டைகொள்ளு
மாச்சடாயிரத்தஞ்சீழ்வெளியுள்மூல
மகத்தான முளைமூலம் வாங்குங்காணே 147

காணப்பாகுளப்பாசி கிழங்குவாங்கி
கண்டங்கண்டமாயரிந்து பலமாறைந்து
பேணப்பாபலகாயம்பசுநெய்விட்டு
பிரட்டியே வேகவைத்துப் பலமொன்றாக
போணப்பாகெசமுகனைப் பூசைபண்ணி
தெரிசித்து ஆறைந்துதினமேகொள்ளு
ஊணப்பா விரத்தஞ்சீழ்வெளியுள்மூல
மொழிந்துபோமுளைமூலம்நயந்துபாரே. 148

## கால்கை முடக்கத்துக்கு.

நயந்துடார்கால்கைகள் நடுக்கமானல்
நன்றாகச்சொல்லுகிறேனவிழ்தங்கேளு
நயந்துபார்கானத்திலுஞ்சல்தேடி
நலமானயிலைபறித்துகொண்டுவந்து
நயந்துபார்வர்க்கம்பூவரிசிவாங்கி
நலமாகவதிற்சேர்த்துயிடித்துவாங்கி
நயந்துபாரொருமூன்றநேரங்கொள்ளு
நாடாதமுடக்கமெல்லாந் தவிர்ந்துபோமே. 149

## சூட்டுக்கு.

போமப்பா சூட்டுடனேகடுப்புவெள்ளை
போகத்தால் வந்தகர்மந்தீரக்கேளு

ஆமடாயெண்ணெயொன்றதிகஞ்சொல்வேன்
　　ஆமணக்கினெண்ணெய்படி யொன்றுக்குள்ளே
காமடாதேங்காய்ப்பால் பழமுஞ்சாறு
　　கனமானயீருள்ளிச்சாறுங்கூட்டி
கோமடாபசுவின்பாற் படிகாலாகக்
　　குறையாமற் படியொன்று கூடச்சேரே. 150

சேரப்பாபாண்டத்தி லிட்டுக்காய்ச்சி
　　திறமானமெழுகுபத மிறக்கிக்கொள்ளு
காரப்பாகோரோகிணி குங்குமப்பூ
　　கூட்டுவாய்வகையொன்றுவிராகனுக
ஆரப்பாகருகாமற் பொடித்துக்கொண்டு
　　அப்பனேயம்மெழுகில் திரட்டிவாங்கி
காரப்பாகுருவின்படிபோற்றிசெய்து
　　காலசந்தியிருநேரங்கொண்டாக்கேளே. 151

கேளப்பாயிரண்டுநேரந்தான்கொண்டாற்
　　கெடுதிகெட்டுவோடுமடாசூடுபோச்சு
வாளப்பாபுளிபுகையுந்தள்ளிப்போடு
　　வளமாகக்கொண்டிடவேவாங்கிப்போகும்
சூளப்பாயின்னமொரு வவிழ்தங்கேளு
　　சுருக்குள்ளயெளிவிஷம்போமிருமல்தீரும்
ஆளப்பாதசவாய்வு பத்துபோகும்
　　அம்மேனியிலைபிடிதான்பறித்துவாங்கே. 152

வாங்கியேமுளைகைந்து விராகன்சேர்த்து
　　வகையுடனேயிரண்டையுந்தானரைத்துவாங்கி
நேங்கியேபுழுங்கரிசி படிகாலப்பா
　　திறமானதிரிபலையின்கியாழத்தாலே
ஓங்கியேயிராக்கால மூறப்போட்டு
　　வுத்தமனேமாவரைத்து மருந்துசேர்த்து
பாங்கியேயிருமூன்று அடைதான்தட்டி
　　பசுநெய்யிற் சுட்டுமெள்ள வெடுத்துக்கொள்ளே. 153

கொள்ளப்பாஅடையொன்று நெய்யிற்தோய்த்துக்
　　குமரியேதின்றுவா நாளாறுதான்
கள்ளப்பாபுளிபுகையுமொன்றுமாக

தவறுமலிம்முறையைச்செய்துபாரு
அள்ளடாநோயெல்லா மகன்றுபோச்சு
அப்பனேயின்னமொரு வலிழ்தங்கேளு
விள்ளடாவோதண்டவாதம்வந்தால்
விபரமாய்ச்சொல்லுகிறேன்விரும்பிக்கேளே. 154

வேறு.

சூறணவாய்வுக்கு.

காணப்பாகானகத்தில் முளைத்தசுண்டை
கையாறவொருபிடிதான்கொழுந்துவாங்கி
தாணப்பாவரைத்துநன்றாய் முள்ளிக்காய்போல்
தனியானவிளக்கெண்ணெய் விட்டேமத்தி
மூணப்பா நேரத்திற்கொள்வாயாகில்
முதிர்ந்துவந்தவாதமெல்லா மொழிந்துபோகும்
ஆணப்பாபத்தியந்தானென் றுமில்லை
யப்பனேயின்னமொரு மருந்துகேளே. 155

வேறு.

கேளடாஅண்டத்தின் வாய்வுவாதங்
கிருபையுடன் போவதற்கு மருந்துகேளு
நாளடாபித்தபிண்டி புங்குதேடி
நல்மகனேவொருபிடிதான் கொழுந்துவாங்கி
வேளடாவெள்ளுள்ளிமிளகுதன்னில்
விதமுடனேயரைந்துநன்றாய் விரும்பிக்கேளு
கேளடாயெலுமிடச்சங்காய்போலப்பா
குவந்தாவின் வெண்ணெயிலேகுழம்பிடாயே. 156

குழப்பியேயிருமூன்று நேரங்கொண்டால்
குவிந்துவந்த அண்டத்தின்வாதம்போச்சு
கழப்பியேகரிகரப்பனென்றுமாகா
தனியுப்புபுளிபுகையுந்தள்ளிப்போடு
விளப்பியேவென்னீருஞ் சாதங்கொள்ளு
வேறென்றுஞ்செய்யாதே விரைந்துபாரு
அளப்பியேவாதமென்ற ரோகம்போச்சு
அப்பனேயின்னமொன்று வுரைசெய்வேனே. 157

## கண்சிவப்புநீர்ப்பாய்ச்சலுக்குமருந்து.

உரைப்பானநேத்திரத்தின் சிவப்புதண்ணீர்
ஊடுருவிபாயுதற்கு வவிழ்தங்கேளு
நிறைபானயெண்ணெயொன்று முழுகச்சொல்வே
னிசமானவா கண்டையுருகுஞ்சாறு
புரையானநல்லெண்ணெபொன்னுங்கண்ணி
பகர்ந்தரையான்சாறுடனே பசுவின்பாலும்
குரையானவெள்ளாட்டு நீருங்கூட்டி
குவிந்தலரும் பெருவயன்லத்திற்சாறே. 158

## எலும்புருக்கிக்குப்போரிமாவுஅவிழ்தம்.

சாறப்பாவொவ்வொன்று படிதான்வாங்கி
சாதகமாய்ப்பாண்டத்திலிட்டுக்கேளு
வாரப்பாபசுவின்னெய்படிதான்வாங்கி
வள்மானஆயில்பட்டைமிளகுசேர்க்க
ஆரப்பாவகையொன்று பலமொன்றாக
அப்பனேவால்மிளகு கிராம்புயேலம்
காரப்பாகஸ்தூரிமஞ்சள்நெல்லி
கருவானவேப்பமுத்து கடுக்காய்ச்சேரே. 159

சேரப்பாவகையொன்று விருகனுலு
சேர்த்துமேயரைத்ததிலே கலக்கிப்போடு
பாரப்பாதீயெரித்துகாய்ச்சிவாங்கு
பக்குவமாய் மெழுகுபதம்வடித்துக்கொண்டு
கூரப்பாதலையிலிட்டுத் தேய்த்துப்பாரு
குளிர்ந்தசற்றுநேரம்போய்நீர்விட்டாட்டு
தாரப்பாயித்தயிலமுழ்கிப்பாரு
தவறுதுரோகம்போந்தப்பாதென்றே. 160

தப்பாதுயெலும்புருக்கிமேகத்தாலே
தவறுமல்சீழிரத்தம் வீழ்கும்பாரு
செப்பாதேமருந்தொன்று சொல்லக்கேளு
தேசத்திலிம்மூலியுரைக்கப்போகா
அப்பாகேளாவாரைவித்துகூட்டி
அளந்தொன்றுபடிபாக வாங்கிக்கொண்டு
எப்பாகப்பொரிக்கம்பு பொரித்துப்போட்டு
வுத்தமனேபடியொன்று அளந்துவாங்கே. 161

வாங்கியேபடியொன்று மாவாய்ச்செய்து
வளமாகக்கொண்டிடவேயெட்டுநாளில்

ஓங்கியேயிருநான்குநேரங்கொண்டால்
ஓகோகோயெனும்புருக்கி ரோகந்தீரும்
பாங்கியேபுளிபுகையுந் தள்ளிப்போடு
பரிந்துண்ணமேகமெல்லாம்பறந்துபோகும்
தேங்கியேயின்னமொரு வவிழ்தங்கேளு
திறமானவல்லாதிசொல்லக்கேளே. 162

## வல்லாதிலேகியம்.

சொல்லுவேன்வல்லாதி லேகியத்தைக்கேளு
சொற்பெரியகிரந்திமுதல் சூலைக்கட்டு
வெல்லுறேன்சேங்கொட்டைபலமஞ்சப்பா
வெந்தசுண்ணநீரதிலே வேகப்போடு
அல்லுறேன்முளைபோக்கிக்கழுவிப்போட்டு
அப்பனேசாணிப்பால் வேகப்போடு
மல்லுறேன் கழுவியதையெடுத்துக்கொண்டு
யாப்பசுவின்பாலதிலேவேகவையே. 163

வையப்பாகழுவியதைச்காயப்போட்டு
வளமானகல்வத்திற் பொடித்துக்கொண்டு
செய்யப்பாபெள்ளஞ்சுபலம்பத்தா
கதிறமாகப்பெருவாயனீறிற்போட்டு
ஐயப்பாயிருநேரஞ்சென்றபின்பு
அப்பனேகழுவியதைக்காயப்போட்டு
பையப்பாயிளவறப்பாவறுத்துவாங்கி
பக்குவமாய்ப்பொடிசெய்து கூடச்சேரே. 164

சேரடாபனைவெல்லம் பலமூவைந்து
தீர்க்கமாய்ப்பொடித்ததிலேபிசறிவாங்கி
தீரடாதிண்சரிதிமுள்ளிக்காய்போல்
தின்னுவாயிருநேரமீரைந்தேநாள்
காரடாபத்தியமாயடுத்துக்காரு
கடுகுப்புபுளிபுகையுங்காணப்போகா
ஆரடாபசுவினுடனெய்யிற்கொள்ளு
அமட்டுமேடாகிரந்திமுதலகன்றுபோமே 165

## சிந்தாதிலேகியம்.

போமடாபெருவயிறு கெண்டையுதிரப்பாண்டு
ஆமடாகாமாலை பாங்கிச்சூலை
யானைசொரிதுன்மமடா யிளைப்புமூலம்
காமடாசூலையொடு மேகஞ்சன்னி

கடுப்புடனே வா்தநீர்யோனிச்சூலை
சாமடா பௌத்திரமும் பிராந்திவாந்தி
தனிவிக்கலிருமலுடன்சூடுமாச்சே. 166

சூடுமிஞ்சிப்பிரமியமாமுழங்கால்வாதஞ்
சுகபோகத்தால் விளைந்த அண்டவாதம்,
ஆடுமிஞ்சிநோய்கொண்டு வழிந்துபோனா்
அப்பனேவறிவுகெட்டும்போனாரையோ
காடுமிஞ்சிப் போகாமற்சொல்லக்கேளு
கண்ணுக்குளொளிபோலக் காணச்
சொன்னேன்தேடுநிந்ததிலேகியத்தைக்கண்டால்
திரைகடல்போய்புக்கி விடும்ரோகந்தானே. 167

தானென்றமருந்தினிட் விபரங்கேளு
சாதகமாய்ப்புளியிலையும்
பழச்சாறப்பாகானென்றவிருமூன்று
மாதஞ்சென்ற காடியுடனே நீரப்படி
மூன்றாக தேனென்றபாண்டத்திலிட்டுக்கேளு
திறமானயிரும்பினுடசட்டிவாங்கி
பானென்ற பலம்ரண்டுநிறுத்துப் பின்கேள்
பாங்கானபாண்டத்திலிட்டுவையே. 168

வையப்பாவேடுசட்டிப்பதனம்பண்ணி
வளமாகயிருமூன்று நேரஞ்சென்றால்
பையப்பாவிரும்பதனை யெடுத்துப்போட்டு
பார்மகனே வடிகொண்டுயிறுத்துவா்ங்கி
செய்யப்பாசீனியெடைபலமீரைந்து
திறமானமுன்னீரிற்யோட்டு மூடி
ஜயப்பாவதின்பிறகு சொல்லக்கேளு
அப்பனேகடைசரக்குவிபரங்காணே. 169

காணப்பாசீனப்பாற்பலமீரைந்து
கருதியே யின்னமொரு மூன்றசேரு
தோணப்பாவாவின்பாலில் வேகவைத்து
சுருதியுடன் ரவிதனிலேகாயப்போட்டு
ஆணப்பாகல்வத்திற்றாளா யாட்டி
யப்பனே வடிகட்டிவைத்துக்கொண்டு

தூணப்பாசாதிக்காயைந்துங்கூட்டி
துரிசானசமுத்திராப்பழமுமஞ்சே. 170

அஞ்சானபெருங்காயங் கிராம்புயேலம்
அதில்ரண்டுசீரகமும் வெட்டிவேருங்
கெஞ்சான வாசனைபூலாக்கிழங்கு
கிருபையுடன் வகையொன்று பத்திற்பாதி
செஞ்சானதிப்பிலிதான்பலமும்ரண்டு
செங்கழுநீர்கோஷ்டமடாபலமுங்கால்தான்
பஞ்சானகொத்தமலலி மிளகுரண்டு
பாய்ச்சிவிடுவகையொன்றுபலமுமஞ்சு. 171

அஞ்சுடனேசிற்றரத்தைகடுக்காய்சுக்கு
அதிமுந்திரி பேரீச்சம் பழமும்ரண்டாய்
பிஞ்சுடனே தான் பிக்காய்வகையொன்றுக்கு
பேரானபலமொன்றுநிறுத்துப்போட்டு
கருஞ்சுடனேபத்திரிதான்விராகனுலுகைம்
முறையாய்க்கருகாமல்பொடித்துவாங்கி
தஞ்சுடனேவடிகொண்டு பொடியையெல்லாஞ்
சாற்றிலுமேகுழப்பியே சார்ந்துகேளே. 172

கேளப்பாசீனிபலமூன்றும்போடு
கிருபையுடன் பாடிபோல்காய்ச்சிவாங்கி
வாளப்பாபசுவினெய் தேனுங்கூட்டி
வகையொன்று படியரைதான்விட்டுக்கிண்டி
தாளப்பாதிறந்துவிட்டேனினிமேலென்ன
தாயானமனோன்மணியைப்பூசைபண்ணு
தேளப்பாகொட்டுதல்போல் சுருக்காய்ப்பாரு
தேவிசத்திகணபதியைப்பூசைபண்ணே. 172

பண்ணப்பாலேகியம்போல் கிண்டிக்கொண்டு
பண்பாகநவதான்யபுடத்திற்போடு
எண்ணப்பாயீரெட்டுநேரஞ்சென்றால்
என்மகனேபுன்னைக்காயளவுதானும்
உண்ணப்பாமண்டலமேகொண்டாயானால்
உதருகின்றவாயுவெல்லாமகன்றுபோகும்

அண்ணப்பாயிவைந்து தினமேகொண்டால்
அப்பனேபின்பத்து நாளாகாதே. 174

ஆகா நாள்பத்துசென்றபின்பு
அப்பனேபின்பத்துவவிழ்தங்கொள்ளு
போகாதநோய்களெல்லா மொழிந்துபோகும்
புளிபுகையுங்கிரந்திகறிகிழங்குமாகா
வேகாதசங்கிலேயைச்சாறுவாங்கி
விபரமாயுப்பரைத்துவில்லேதட்டி
நோகாதகுழி வெட்டியெருமேல்வைத்து
நுணுக்கமாய்ப்புடம்போட்டுயெடுத்துக்கொள்ளே. 175

கொள்ளப்பா மேனி புங்குபால் விட்டாட்டி
குமரியைப்புடம்போட்டுயெடுத்துப்பாரு
அள்ளப்பாமறுபடியுந்தேசிநீராலாட்டியே
வில்லேதட்டிமுன்னேபோடு
விள்ளப்பா வுப்பதனேவுடைத்துக்கொண்டு
விபரமுடன்சோற்கறியிலிட்டுக்கொள்ளு
பள்ளப்பாவிப்படியேதினந்தோறுண்ண
பறந்தபோம்நோய்களெல்லாம்பாருபாரே. 176

மலஞ்சலங்கட்டினல்.

பாரடாமல சலமுங் கட்டிற்றுனல்
பார்மகனே யடிவயிற்றைபுண்ணாய்நோகும்
நேரடாமருந்தொன்றுசொல்லக்கேளு
நிமிஷத்தில் மலசலத்தை நிகழ்த்திப்போக்கும்
தேரடபனவெல்லம் விராகன்ரண்டு
திறமானவெடியுப்புசமனுக்கொணடு
காரடாரண்டையுந்தானரைத்துவாங்கி
கனிந்தசுண்டைக்காயளவுவுருட்டிப்போடே. 177

உருட்டியேதின்றிருபொழுது தினமோமூன்று
வுத்தமனேவேறென்றுமாகாதப்பா
திருட்டியேபசுவின்மோர்சாதங்கொள்ளு
சிவசிவாபுளிபுகையுஞ் சேரப்போகா

மருட்டியேகுடல்வாய்வு பொருமல்தீரும்
வரிசையாய்ச்சொன்னகுரு முறைதப்பாது
சுருட்டியேயிம்மருந்தை செய்யும்போது
சிவசத்திபூசைதனை த்திறமாச்செய்யே. 178

## முறைக்காய்ச்சலுக்கு.

செய்யடாமுறைக்காய்ச்சல்வந்துதானல்
தீர்க்கமாய்ச்சொல்லுகிறேன் மருந்தைக்கேளு
பையடாயுலந்தைமாத்தடியிற்சுத்தி
பார்மகனேநோயாளிபேரைச்சொலி
ஐயடாசாய்பிராணிதூபங்காட்டி
அப்பனேபிடியிலேதான்பறித்துக்கொண்டு
வையடாமரத்தடியில்முன்பேர்சொல்லி
வந்தனைசெய்மறுபடியும்பறத்துவாங்கே. 179

வாங்கியேவெள்ளுள்ளி வசம்புகூட்டி
வளமானமிளகேழு அரைத்துவாங்கி
ஓங்கியேயிருமூன்றுநேரங்கொண்டா
லுத்தமனேமுறைக்காய்ச்சலொழியும்பாரு
தேங்கியேபத்தியமாயிருந்துவந்தால்
தேகத்தில்வினைகளெல்லாஞ்சிதறிப்போகும்
பாங்கியேயின்னமொரு வழிதஞ்சொல்வேன்
பரிவானயிம்முறையைப் பாருபாரே. 180

## அறுவகைமூலத்துக்கு.

பாரப்பா திரிகடுகு சூதம்லிங்கம்
பாங்கானசித்தாமணக்கின்பருப்பினுங்கும்
வேரப்பாவகையொன்று விராகன்தூக்கி
வெண்காரம்விராகனெடை நாலுதூக்கி
மாரப்பாவாளமதுவிராகனேழு
வாழைப்பூச்சாறதனில்வில்லைதட்டி
சேரப்பாசட்டியிலிட் டடுப்பிலேற்றி
மண்சீலைசெய் துசட்டியுமல்லாத்திமூடே. 181

மூடியமேற்சட்டியினற்சலம்போறடியிட்டு
மூடியெரிகடிகையுமேழ்பற்பமாச்சு
நாடியெடுத்தாறியபின் தூபங்காட்டி
நற்குன்றியிடைதூக்கி யனுபானங்கேள்
தேடியதோர்கழற்கொட்டி பருப்புபுன்கு
துளியாகக்கியாழத்தையீரேழாற்போதுகொள்ள
ஓடிடுமேயாறுவகைமூலம்பாரு
ஓகோகோபுளிபுகையுமொழியாக்கேளே. 182

குஷ்டம்பதினெட்டுக்கும்திமிர்மூலத்திற்கும்சூரணம்.

கேளப்பாகொடிவேலியாடாதோடை
கெடியானவெள்ளறுகுசிவனர்வேம்பு
வேளப்பாசாரணைவேங்கிலையாவாரை
மேனியப்பைக்கிழங்குசமனுகச்சேர்த்து
தாளப்பாகிழலுலர்த்தி யிடித்துக்கொண்டு
தனியானதேனிற்காற்பலமேபோட்டு
நாளப்பாமண்டலமோரிருபோழ்துகொள்ள
அளைந்துகடிதிமிர்குஷ்டமூலம்போமே. 183

போமடாஅயச்செம்புவுருக்குகாந்தம்
பித்தளைவெண்கலம்ரசவெண்காரங்கெந்தி
ஆமடாமனோசிலைதிப்பிலியின்மூலம்
அரிதாரம்பொடிவகைக்குப்பலமேதூக்கி
தாமடாகுமரிரசம்நாள்மூன்றாட்டி
கடுகுபோல்வில்லைதட்டிசெய்துலர்த்திக்கொண்டு
நேமடாசட்டியின்மேற்சட்டிமூடி
நெகிழாமல்சீலைமண்ணடவாய்செய்யே. 184

வங்காரசஞ்சீவிசூரணம்.

செய்யப்பாவடுப்பேற்றியீராறுசாமஞ்
செந்தணல்மூட்டருண்ணைப்போல்செந்தூரிக்கும்
பையப்பாட்ணமரைதாணிறுத்துவாங்கு
பாங்கானதேருள்ளரியனுபானஞ்சீனி
மெய்யப்பாமண்டலமோரரைதான்கொள்ளு

மேகங்கல்லடைப்புசதை யடைப்புபாண்டு
கொய்யப்பாசூலைதந்தவாய்வுபித்தங்
சொதிப்பானகாமாலை வூஷ்ணகுன்மந்தீரே. 185

தீரடாபெருவயிறுவிஷபாகந்தான்
சிலேத்துமம் பெருநோய்கண்சிவப்புவாய்வு
மாரடாபிரமியமேகட்டும்வங்கரச
சஞ்சீவிபற்பமோடொக்க
பாரடாகருநாபிகழஞ்சிதூக்கி
பசுநீரிலாறுதினமூறப்போட்டு
தேரடாவுலர்த்தியேதிப்பிலிமூலந்தான்
திறமாகத்தூக்கிட்டிருபலமுங்கூட்டே. 186

## மாத்திரை.

கூட்டப்பாகல்வத்தில் மூன்றென்றுக்க
கொடுத்திடுவாய் வெள்ளுள்ளிதயிலம்வாங்கி
ஆட்டப்பாமயனம்போலரைத்துக்கொண்டு
அப்பனே பயறதுபோ லுருட்டிப்போடு
வாட்டப்பாநிழலுலர்த்தியனுபானங்கொள்
வருமிளகுதிப்பிலிசூரமே செய்த
ஊட்டப்பா யிஞ்சிரச மூன்றுகூட்ட
வுத்தமனேமாத்திரையொன்றிழைத்திடாயே. 187

இழைத்திடு நாளொருபத்திருபோழ்துந்தான்
இதமாகக் கொண்டிடவேமுவராசன்னி
துழைத்திடுநாலிருபததோர்நாள் வாதம்
சுணைகொண்டுவோடுமடா சிறிசசுவாதம்
உழைத்திடுவாய்வுவஸ்துகளொன்று
மாகாதும்மகனேயிச்சாபத்தியமேகாரு
தழைத்திடுயிம்மருந்துபொய்யாதப்பாத
வராதுதவராதுசாதிப்பாயே. 188

## நாகபற்பம்.

சாதிப்பாய்நாகமிடைபலந்தானென்று
தளமான் அயச்சட்டி தன்னிற்போட்டு

சோதிப்பாய்கொல்லுலையிலுருகும்போது
தூக்கிவிடு யெள்ளெண்ணெய் சுத்தியாச்சு
வாதிப்பாய்திரும்பசட்டியிலேபோட்டு
மாறுமலூதுருகும்பார் பால்துத்தம்
போதிப்பாய்மூன்றுபலம்பொடியேசெய்து
போடுசமன்தூளதின்மேல்மூடிப்போடே. 189

போடப்பாயிருகடிகை நரியிட்டுப்
தீப்போட்டு முன்தூளதனைமேலோடுமூடி
நாடப்பாதிரும்பயிருகடிகையூதி
நல்லெண்ணெய்குத்தியெத்தாறப்போட்டு
தேடப்பாபொற்பணத்தினிடையேதூக்கி
திறமாகயெள்ளெண்ணெயிறபோழ்துந்தான்
சாடப்பாமண்டலமிப்படியேகொண்டால்
தரியாதுயீளைசயங்காசம்பாரே. 190

## அடைகியாழம்.

பாரடாபிரண்டைச்சாறுழாக்கொன்றிற்
பழவரிசியாழாக்கிட்ரேப்போட்டு
சேரடா அதியிடையங்கடித்திரஞ்
சாதிக்கா யிலவங்கஞ்சாதிபத்திரி
வேரடாவகையொன்று விராகன்றாக்கி
மீறுமற்கல்வத்திலேற்றிக்கொண்டு
நெரடாயரைத்தடைமூன்றதிலேதட்டி
நெய்யில்சட்டையந்திதினமிருபோழ்துண்ணே. 191

உண்ணப்பாவதிமதுரம் லவங்கப்பட்டை
வுத்தமனேவகைக்கு விராகனுலந்து
சண்ணப்பாகொட்டியொருபாண்டத்துள்
நீர்தாக்கிட்டிருபடிகடிகையைந்தாறுறல்
அண்ணப்பாகுடிநீரிற்படிகாலாக
அவிழ்தத்தோடிருநேரங்கொள்ளும்போது
துன்னப்பாசுரைத்துளிர்தூதுவளைவற்றல்
சுண்டைவற்றல் நெல்லிவடைதயிராம்பாரே. 192

## செவிடுகாதிரைச்சல்பீனிசந்துக்குதயிலம்.

### வேறு.

பாருகையாந்தகரைமணித்தக்காளி
பசுமஞ்சள் மிதிபாகல்பொன்னாங்காணி
சீறுமுசுமுசுக்கைவேர்சூலெவெண்ணொச்சி
திறமாகவகைக்குச்சாற்படிகால்வாங்கி
வேருதிப்பிலிமிளகு செவியஞ்சுக்கு
மேலானயீசுரவேர் அக்கராகாரம்
மாருசித்திரமூலம் லவங்கப்பட்டை
வட்டதிருப்பிலவங்கபத்திரிகூட்டே. 193

கூட்டப்பாசதகுப்பைதேக்குமஞ்சள்
கோஷ்டம் சீரகம்வகைக்குப்பலங்கால்தூக்கி
ஆட்டப்பாமுன்ரசத்திலரைத்துப்போடு
அப்பனேயெள்ளெண்ணெய்ப்படி தான்விட்டு
மூட்டப்பாசிறுகத்தியடுப்பிலேற்றி
மூன்றுகாளெரிமெழுகுபதம்பார்யாற்றி
தேட்டினுரண்டடுத்துழ்கச்செவி
யிரைச்சல் பீனிசல் தீரும்பாரே. 194

## திரிலோகசேக்தூரமணிலேகியம்.

### வேறு.

பாரப்பாசுக்கு புளிபிராணிசாம்பல்
பாங்கானநெல்லிமுள்ளிபறங்கிச்சக்கை
சேரப்பாவகைக்காறுபலமேதூக்கி
திப்பிலிமூலங்காயஞ்சிறுநாகப்பூ
மீரப்பாதாளிசபத்திரிதான்றிக்காய்
மிளகேலஞ்செவ்வியந்திப்பிலியெட்டொன்று
மாரப்பாவகையொன்று விராகன்ரண்டு
மைந்தனேமோடிநற்சீரகமுங்கூட்டி. 195

கூட்டடாவெட்டிவேர்விலாமிச்சங்கு
கொத்தமல்லிபச்சிலெசிற்றரத்தையெட்டும்
நாட்டடாவகையொன்றுபலமொன்றேகால்

நல்லபிரப்பன்கிழங்குபலமோரண்டு
வாட்டடாசட்டியிலிட் டடுப்பிலேற்றி
வகையொன்றுங்கருகாமல்வறுத்துக்கொண்டு
ஆட்டடாயிடித்துத்தூள்வடியிட்டேபின்
னறுபலம்பழையவெல்லம்கேளே. 196

கேளப்பாபாகுபிடித்தூளைப்போட்டு
கிண்டடாநெய்பலமாறதிலேவிட்டு
தாளப்பாதான்றிக்காய்ப்பிரமாணந்தான்
தவறாமல்மண்டலமோரிருபோழ்துங்கொள்
நாளப்பாபிரமியமெட்டதும்போம்வெள்ளை
நன்மகனேபதரம்வெளுப்பு யூஷ்ணவாய்வு
நீளப்பாஅக்கினிபுஷ்டில்லாமல்மஞ்சள்
நீருவெளுத்தேகுளிந்து நீங்கிப்போமே. 197

பேதிக்குசிவதைவேர்குணம்

போமப்பாசிவதையின்வேர்பலமோரெட்டு
பொடியாகக்கொய்தாவின் தன்பாலாக
ஆமப்பாபடியரைதா னதிலேவிட்டு
அப்பனேவேகவைப்பாய்சுத்தியாச்சு
தாமப்பாவாய்விளங்கம் லவங்கம்பத்திரி
தாக்குரோகணிவகைக்குப்பலமொன்றாக
நேயப்பாமிளகுபலங்கடுக்காய்சுக்கு
நிரைகாணும்வகைநாலுபலமுந்தூக்கே. 198

தூக்கடாயிடித்ததனைவடியிட்டேபின்
தூளதிலேவெருகடியின்பிரமாணந்தான்
தாக்கடாசீனிசமனாகக்சேர்த்து
தான்கொள்ளும்போதுவென்னீராற்சுத்தி
தேக்கடாமிளகுடனீ ரன்னங்கொள்ளு
சொல்லரியசுக்குகியாழ்த்தைக்
கூட்டுவாக்கடபாலன்னக் கொண்டபின்பு
வாகாக்கிபாழத்தைக்கூட்டுகூட்டே. 199

கூட்டப்பாநேர்வாளந்தோலைப்போக்கி
கொடிதானநஞ்செடுத்த கழஞ்சுமூன்று

நாட்டப்பாசுக்குபொடிகழஞ்சுமூன்று
நாட்சென்றப்பழவெல்லங்கழஞ்சிமூன்று
ஆட்டப்பாகல்வத்திலிருசாமந்தா
னப்பனேமெழுகதுபோலுருட்டிக்கொண்டு
மூட்டப்பாகுன்றிமணிப்பிரமானந்தான்
மூன்றுவிசைவாந்திவயிற்பேதியாமே. 200

ஆமடாவவில்தமதையடுத்துண்ணுதே
ஐந்துதினந்தள்ளொருதாளவிழ்தங்கொள்ளு
தாமடாமுறையறிந்திப்படியேகொண்டால்
தரியாதுவயிற்றுவலி தவறிப்போகும்
நேமடாபொரிமிளகு நீரோடன்னம்
நேரரைக்கீரையின்வென்னீராகும்
ஓமடாகுருவாக்குமுறைபொய்யாது
உத்தமனேகியாழத்தைக்கொள்ளே. 201

## திருநீலகண்டமெழுகு.

கேளப்பாவாளமிடை பழஞ்சாணத்தில்
கொதிக்கவேயிருகடிகையெரிவிட்டேபின்
கள்ளப்பாஉலர்த்திடு மேலோடுபோக்கி
சேளவேநெய்சட்டிசிறுகீரையிட்டு
மெள்ளப்பாவறுத்துசெய்யாமணக்கின்முத்து
மேலோடுபோக்கினுலொன்றங்கூட்டி
தெள்ளப்பாலிங்கமரைகழஞ்சுதூக்கி
சேர்த்தரைசெய்மெழுகுபதஞ்சிமிளிற்சேரே. 202

## பேதிக்குலிங்கமெழுகு.

சேரடாபெருங்குறிப்பிரமாணந்தான்
திரட்டியேபனவெல்லங்கவசஞ்செய்து
நேரடாவுள்ளுக்குவயிற்பேதிக்கும்
நெஞ்சனத்திமூன்றுவிசைப்பித்தம்போக்கும்
சாரடாவென்னீரால்கைகாற்சுத்தி
சதியாகும்நித்திரையைத்தான்செய்யாமல
மீரடாதயிர்பயிரோடன்னங்கொள்ளு
மேலானசுக்குகியாழத்தைத்தாக்கே. 203

## பேதிமாத்திரை.

தாக்கடாவாளமிடைபலமோரண்டு
　தனிமேதைச்சாணியெழுசரமேசுத்தி
போக்கடாமேலோடுவூக்கத்தாளை
　பூரியெடுத்துச்சுளையும்பருப்புங்கூட்டி
நோடாசட்டியிலிட்டடுப்பிலேற்றி
　நுண்மையாய்ச்செம்பொனிறம்வறுத்துவாங்கி
தோக்கடாமிளகோமம் ஆக்கராகாரம்
　சுக்குடனேதாளிசபத்திரியுங்கூட்டே. 204

## பேய்க்குமட்டிக்காய்ச்சூணரம்.

கூட்ட்ப்பாமோடிசன்னராஷ்டசங்கிராம்பு
　கோஷ்டமுடன்வாள்மிளகு
விளங்கந்தேக்கு மாடடப்பா வகையொன்று
　கழஞ்சிதூக்கிவறுத்துச்சூரணஞ்செய்து
கரிப்பானசாற்றிலாட்டப்பா மயனம்போ
　லாகுங்குன்றி அப்பனே செய்துலர்த்தி
சிமிளிற்கொண்டு சூட்டப்பா குளிகையிரண்டுறவாய்ச
　சீனிசுயபேதிமிளகுடனீரன்னந்தாக்கே. 205

தாக்குபேய்க்குமட்டிக்காய்விரையைத்தோண்டித்
　தோள்தள்ளியேதறித்திடுவாய் பீங்கானுள்ளே
தூக்குயிந்துப்புகழஞ்சிடையீரைந்துதொங்கித்து
　கதிரொளியிலுலரப்போட்டு தோக்குகல்
வந்திலிதையேத்திக்கொண்டு துடதந்தையாற்
　கடிகைவடியிட்டேபின் நோக்கு
விராகனிடை தான் பனவெல்லத்தில்
　நுண்மையாய்க்கவசஞ்செய்யோர்போழ்துண்ணே. 206

உண்ணவேவாந்திவரும் வயிற்பேதிக்கும்
　ஓகோகோபூநாகமகன்றவீழும்
கண்ணவேசிறுபயறுவறுசெய்தோடுகழட்டிய
　பச்சரிசிரண்டுறவாய்ப்பொங்கி
திண்ணவேமலக்கட்டுபித்தம்போகுஞ்
　சீரகஞ்சுக்கோடுகியா ழத்தைக்கொள்ளு

நண்ணவே வென்னீராற்கைகாற்சுத்தி
நாடாதேயுளிபுகையுந்தள்ளிக்கேளே. 207

## பேதிக்குச்சதுர்விதமேழுகு.

கேளப்பாகொடிமுந்திரிப்பழங்கற்கண்டு
கெடியான பேரீச்சம்பழநேர்வாளம்
தாளப்பாசுத்திசெய்து சமனாய்ச்சேர்த்து
சண்ணியமாய்கல்வத்தில்மயனம்போலாம்
வாளப்பாதூதுளக்காய்ப்பிரமாணந்தான்
ண்மந்தனே கொண்டிடவேவயிற்பேதிக்கும்
நாளப்பாபத்தியந்தானென்றுமில்லை
நற்சீரகஞ்சுக்குகியாழத்தைக்கூட்டே. 208

## தாகத்துக்குதளம்.

கூட்டப்பா பொன்வெள்ளிபவளமுத்து
குங்குமப்பூகோரோசினைகஸ்தூரி
நாட்டப்பாவதிமதுரம் அக்கராகாரம்
நல்லரத்தை கலைக்கொம்புபுரச்ம்வித்து
நீட்டப்பா அதிமதுரமாஞ்சியேலம்
நேரானவால்மிளகுலவங்கப்பத்திரி
மாட்டப்பாருத்திராட்சம் வில்வத்தோடு
மகத்தானவெண்சங்காமணக்கின்வேரே. 209

வேரடாகோஷ்ட மொடுகிராம்புசுக்கு
வெவ்வேறுவகையொருகழஞ்சிதூக்கி
நேரடாமுலைப்பால்தேன் கோவைச்சாற்றில்
நேர்த்தியாயிழைத்து விழுதெடுத்துக்கொண்டு
தீரடாதாபசுரந்தோஷஞ்சன்னிதீர்ந்து
கருதோஷமும்நாவறட்சிகண்டால்
சேரடாநாவினிற்கண்டவிழ்தந்தன்னை
தேய்த்திடவேநோய்பலவுந்தெறிக்கும்பாரே. 210

## கண்டாத்திரி.

பாரப்பாயிஞ்சியெடைபலமோர்வைந்து
பாங்கானமேற்றோலகத்திபயர்போல்கொய்து
சேரப்பா சட்டியிலாவினெய்விட்டு

செம்பொனிறமாய்வறுத்துப்பொடியேசெய்து
வேரப்பாகசகசாபறங்கிப்பட்டை
மேலான பொற்கடுக்காய் லவங்கப்பட்டை
மாரப்பாவகையொன்றுபலமேரண்டு
வளமானமிளகுசுக்குமோடிகேளே. 211

கேளடாகற்கடக சிங்கிதான்றிகிராம்பு
கருஞ்சீரகத்திப்பிலிசாதிக்காயுந்
தாளடாதாளிசபத்திரிபோஸ்தக்காய்
சன்னராஷ்டகம்வகைக்குவிராகனேந்து
வாளடாகுங்குமப்பூசாதிபத்திரிவாங்கு
கோரோசினையும்வகையொன்றுக்கு
நீளடா விராகனெடையரையாகத்தானிரை
சரக்கோடிதுவெல்லாம்பொடித்துக்கூட்டே. 212

கூட்டப்பாசர்க்கரைதான்பலம்நாலேந்து
கொதியிட்டுப்பாகுபிடித்தூளேப்போட்டு
ஆட்டப்பா யீரைந்துபலந்தேன்விட்டு
ஆவினெய்யொக்கவிட்டுப் பலமீரைந்து
மாட்டப்பா தீயைந்து கடிகைமட்டும்
வளமாகக் கண்டாத்திரிலேகியமிதாச்சு
ஆட்டப்பா பாக்களவுயிருநேரந்தான்
ஆட்டானசிரஞ்மவலி விட்டொழிந்துபோமே. 213

போமடாசிவதைவேர்பலந்தான் மூன்று
புரண்டதுபோற்கொய்த வின்பால்
சேர்த்துவிட்டு ஆமடாசுத்திசெய்து
வுலர்த்திக்கொண்டு அப்பனேமிளகுசுக்கு
காயமேலம் தாமடாசீரகமிப் துப்போடொக்க
வரிசிதப்பிலிமூலந்தான் நேமடா
வகையொன்று விராகனேழு
நீட்டிகதிர்காட்டிச் சூரணமேபாரே. 114

பாரப்பா சீனிசமனைக் சேர்த்து
பாங்காக நாளிருபத்தொருபோழ்துந்தான்
நேரப்பாவெருகடிப்பிரமாணங் கொண்டால்
நிமிஷத்தில் மூன்றுவிஷைசவயிற்பேதிக்கும்

தீரப்பா புளிபுகையைத்தள்ளிப்போடு
சேராதே வாய்வுவஸ்து தினந்தோறுந்தான்
மாரப்பாவாய்வுபித்தம்பறந்துபோகும்
வாங்குப்பசிதீபனந்தானதிகங்காணே. 215

பயித்தியம்.

காணுசித்தாமணக் கெண்ணெயாவின் பாலுங்
கதித்தெழுந்த செவ்விளநீர் வகையொன்றுக்கு
ஊணுபடியொன்றது வாமணத்தக்காளி
பறவாமீருள்ளிரசம் வல்லாரைச்சாற்
வேணுமரைப்படிசேருவகையொன்றுக்கு
வீறுரையாந்தகரைமயில்மாணிக்கஞ்சாற்
தோணுபூவாசன்சாற்நற்கோவைச்சாற்
தொந்தித்துவகையொன்றுபடிகால்கூட்டே. 216

கூட்டுகடுக்கடுக்காய்தான்றிக்காய் மாசிக்காய்
குன்றிநீர்விட்டான்கிழங்கு வகையொன்றுக்கு
மாட்டுயிடைமூன்று டலம்லவங்கப்பத்திரி
வசம்பேலங்கஸ்தூரி மஞ்சள்காட்டுசீரகம்
லவங்கத்தோடுசாதிக்காய் கருஞ்சீரகம்
வகைக்கு விராகன்மூன்று
மூடடுநற்சீரகங்கொத்தமல்லி சுக்கு
முள்குடனே வகையொன்றுபலமுஞ் சேரே. 217

சேரடாயிரண்டுபலம் பரங்கிப்பட்டை
திறமாக வகையெல்லாம்வறுத்துக்கொண்டு
நேரடாபொடித்து ணெண்ணெயிலேபோட்டு
நீங்காமலெரிமெழுகு பதத்தில் வாங்கு
சேரடாவைங்கரனைப்பூசைசெய்து
கொடுத்திடாய் துட்டினிடையிருபோழ்துந்தான்
பாரடாமண்டலமிப்படியே கொண்டால்
பயித்தியங்கிறு கிறுப்புமேகம்போமே. 218

கிரந்திவெள்ளை இடுப்புநோய்தாதுபுஷ்டிக்கு லேகியம்.

போமடாகெற்பரணம் வாய்மேக்காடுபெரும்பாடு
அஸ்திசுரம் நீர்தாரைப்புண் சாமப்பா

யெலும்புருக்கிவாய்வுபித்தஞ்
சடமீளைப்பு கெணமாம்பிரமியமோரெட்டும்
தாமப்பா தாதுபுஷ்டிபசிபுயுண்டாகுந்தவரு து
வமிர்தசஞ்சீவியெண்ணெய் ஆமப்பா
வாய்வுவஸ்துதிரோ தாயிமாய்கை
யகற்றியிச்சாபத்தியமே காத்திடாயே. 219

கார்த்திடுவாய்கருவேலின் பச்சைதானுங்
கைம்முறையாய்ச்சொல்லுகிறேன்பலமோரண்டு
பார்த்திடுவாய் சுக்கோடுசர்க்கரை
பேரீச்சம்பழம்பாகுவெந்தயங் கொப்பரை
திகாட்டி சேர்த்திடுவாய் வகையொன்றுபலமே
யொன்றுதிறமாகவிடிசெயகோதும்பைமாவு
ஏர்த்திடுவாய்பலமெட்டு டனவெல்லந்தான்
யெட்டுபலம்பாகுபிடித்தூளைப்போடே. 220

## சகலகணம்உள்ச்சூடுமூலவாய்வுவாய்நாறல்எலும்புருக்கி நெய்கள்விஷங்கரப்பான்புண்ணுக்குத்தயிலம்.

போட்டாலே லேகியம்போலாகக் கிண்டி
புகழான ஆவினெய்பலம்நாலிட்டு
ஆட்டடாயெலுமிச்சங்காம் போலந்தி
அப்பனே மண்டலமோரைதான்கொள்ளு
ஓட்டடாகிரந்திவெள்ளை யிடுப்புநோய்தா
னுத்தமனே தாதுபுஷ்டிமிகவுண்டாகும்
மாட்டடாநெய்யன்னம்வெல்லத்தோ
டுண்மாதர்மயக்கம்புளி மண்டலமேதள்ளு. 221

தள்ளடாவராகத்திநெய்யீராழி
சமனாகயீருள்ளிச்சாறுங்கூட்டி
மெள்ளடாசட்டியிலிட்டடுப்பிலேற்றி
மெதுவாகயெரிமெழுகுபதத்தில்வாங்கு
உள்ளடாசீரகஞ்சாபத்திரியேலம்
உத்தமனேவால்மிளகு கிராம்புகஞ்சா
கொள்ளடாசுக்குக்ச்சாசாதிக்காய்
கூட்டுவகைக்கீர்கழஞ்சுபொடித்துச்சேரே. 222

சேரடாசீனியெடைபலமீரைந்து
செவ்வாழைச் சுளைகட்டித்திடுவாயைந்து
பாரடாபரிதிபுடந்தினமேவைத்து
பலமாகத்திருபோழ்து பகுத்துண்டாக்கால்
மாரடாகணத்தினுடவுட்சூடுமூலம்
வாய்நாறலெலும்புருக்கிமேகம்வெட்கை
தீரடாவாய்வுவஸ்து புகையொன்றுகா
திரோதாயிமாய்கைவிட்டு செலுத்திடாயே. 223

செலுத்தப்பாநீரடிமுத்தோலைப்போக்கி
திறமானபருப்பினிடை பலமீரைந்து
வலுத்தப்பா அரைத்தாறுவில்லைசெய்து
வையடாபிட்டவியிலெடுத்தாறுமல்
எலுத்தப்பாகம்பிளியிட்டேசுத்தி
யிறுக்கியேகிட்டிகட்டித்தயிலம்வாங்கி
கொலுத்தப்பாகடிவிஷங்கள்காப்பான்புண்ணு
குதித்தோடும்பத்தியமாய்க்கார்த்திடாயே. 224

## மூர்ச்சைவாய்வுக்குகியாழம்.

கார்த்திடசெங்குப்பிவேர்பலமுமெட்டு
கண்டித்துப்பான்டமதிலிட்டுக்கேளு
மார்த்திடுநற்சலம்படியோராறு
மாறுமலெடுத்தாறியொன்றாய்க்காய்ச்சி
பார்த்திடுமோடிகழஞ்செடைதான்ரண்டு
பக்குவமாய்வறுத்தாழாக்கியாழந்தன்னில்
சேர்த்திடுவரைத்தைந்து நாளுண்டாக்கால்
தெறிக்குமேமூர்ச்சைபுளியுப்புத்தள்ளே. 225

## தண்டமாலை.

தள்ளவேகெந்திகழஞ்செடைதானு
சதுரானதுரிசுகழஞ்செடையோரண்டு
மெள்ளவேசூதமெடைகழஞ்சுமூன்று
வெள்ளைப்பாஷாணமிடை கழஞ்சியொன்று
துள்ளவேமூன்றுவகைபொடித்துச்சீலை
சுற்றியேதிரியாக்கி சூதஞ்சட்டி

குள்ளவேவிட்டுதிரிவேப்பெண்ணெய்த்தோய்த்துக்
கொளுத்தியேமேற்பிடித்துதயிலம்வாங்கே. 226

## சகலபௌத்திரமேககிரந்திமேகவாய்வுக்கு திருநீலகண்டமெழுகு.

வாங்கப்பாபணவெல்லம்பலமோரெட்டு
மைந்தனேபிரட்டியெழுவுண்டைசெய்து
பாங்கப்பாமூன்றரைநாள்கொண்டேபின்னும்
பச்சைநீர்முன்றரைநால் நீக்கலாகும்
ஓங்கப்பாயெட்டநாள்மூக்கூட்டெண்ணெய்ப்
யுத்தமனேயுச்சியிலிட்டேமுழுகி
நீங்கப்பாகோழியினிறைச்சிசேரு
நிதமாகக்கூட்டியடுப்பேற்றிக்காய்ச்சே. 227

காய்ச்சடாமெழுகுபதந்தன்னிலப்பா
கருத்துடனேசலம்படிதன் வார்த்துக்கொண்டு
மார்த்தடாபுளியுப்புவறுத்துப்போட்டு
மாறுமற்சாதமுடன்வென்னீர்கூட்டி
பார்த்தடா வுண்ணுகண்ட மாலேசூலே
பவுத்திரமேகக்கிரந்தி மேகவாய்வும்
சேர்த்தடாயின்னுேய்விட்டகலும்பாரு
திருநீலகண்டமெழுகதுவாஞ்செய்யே. 228

செய்யப்பாசமூலங்கொத்தான்தாளி
திறமானபாண்டத்துள் திமிர்நீர்விட்டு
வையப்பாமாவிலிங்கப்பட்டைசுக்கு
வாய்விளங்கம் வசம்புள்ளிவாதம்போக்கி
பையப்பாபெருமரத்துபட்டையோமம்
பாங்கானவகையொன்று பலமோரண்டு
நையப்பாயிடித்துடனே நீரிற்போட்டு
நழுவாமற் சட்டிமல்லாத்திமூடே. 229

## அண்டவாதத்துக்குவேதுசியாழம்.

மூடியதோர்சட்டியது துவாரமேழு
மூச்சுவிடாமற்படிமண் சீலேசெய்து
ஓடியதோரவியடங்கசீலேமூடி
யுத்தமனேயக்கினியிட்டடுப்பிலேற்றி

நாடியெரித்திடுசாமமீரைந்தாறு
நடுவோடுயெடுத்துதுணி நீர்நனைத்துப்போட்டு
ஆடியதோரண்டைவாதத்தைத்தூக்கி
யசையாமல்வைத்திருந்துவேதுவாங்கே. 230

வாங்கப்பாவசம்புள்ளி தாளிகொத்தான்
வறுத்துவொத்திமண்டலமொன்றதுவேகட்டு
ஓங்கப்பாபிரமியிலை காடிவார்த்து
ஊதல்சுருங்கிடவதைக்கிமேலேகட்டு
பாங்கப்பாசுக்குசிறுதேக்குமல்லி
பருங்கடுகுபேய்ப்புடலு மிவையேபொடித்து
தாங்கப்பாவகையொன்று கழஞ்சுகூட்டி
சட்டியிலிட்டுச்சலமீராழிவாரே. 231

## கிரந்திக்குளண்ணெய்.

வாரடாநாலிலொன்றுகக்காய்ச்சி
மண்டலமொன்றிருபோழ்துமகிழ்ந்தேகொள்ளு
பாரடாவாய்வுவஸ்தும் பழவன்னந்தான்
பகர்ந்தபழம்புளியுப்புவறுத்துப்போடு
நேரடாபசுவின்மோர் வெண்ணிரன்னம்
நெய்யுடனேகருங்கோழி யிறைச்சிசாராயம்
தீரடாதிரோதாயிமாயைதள்ளு
சித்திச்குந்தவறுதுசெய்துபாரே. 232

பாரப்பாசிறுசெருப்படைலெண்ணெச்சி
படர்ந்தபிரமியவழுக்கைசங்கங்குப்பி
சேரப்பாகருநொச்சிகரிசலாங்கண்ணி
திறமானவறுகுமஞ்சணத்திபீருகூளி
சாரப்பாவகைக்குக்காற்படியேவாங்கி
தனிச்சித்தாமணக்கெண்ணெய்படிதானென்று
வாரப்பாவால்மிளகு கிராம்புமஞ்சள்
வகைக்குப்பலங்கால் பொடித்துப்போடே. 233

## கிரந்திக்குமருந்து.

போடடாமெழுகுபதம்வடித்துக்கொண்டு
பிசகாமலெண்ணெயெடைபலமோரண்டு

தேடடாயிப்படிநாளெட்டுகொண்டால்
தெறிகெட்டுவோடுமேடாகிரந்திபுண்ணு
நாடடாமிளகுள்ளி துவரைவித்து
ஈன்மகனே வென்னீரோடன்னங்கொள்ளு
வீடடாபுளிபுப்பு வெய்யோன்முன்னே
மேவதேபத்தியந்தானடுத்துக்காரே. 234

காரப்பாகருங்குருவையரிசிசூதங்
களச்சிச்சாரணை முருங்கைசங்கங்குப்பி
பாரப்பாயின்னுன்குந்துளிரோவாங்கி
பாங்காகவகையொன்று விராகன்மூன்று
நேரப்பாயரைத்து யீராறுவுண்டைசெய்து
நெகிழாமலோராறுதினமேகொள்ளு
தீரப்பாகிரந்தியறும் புளியோடுப்பு
சேராதேயிளவென்னீர்சாதங்கூட்டே. 235

அரையாப்புக் கெண்ணெய்.

வேறு.

கூட்டுமெள்ளெண்ணெயு மாழாக்குநாலு
கொடிவேலிவசம்புவுரி நத்தைச்சூரி
மாட்டுதுரிசுகருஞ்சீரகமோராறும்
வகையொன்றுவிராகனெடைவேர்தானட்டி
போட்டெரித்துமெழுகுபதந்தன்னில்வாங்கி
புத்திரனேநாளொன்றுபலமோரண்டு
மூட்டுநாளாறுகடுகுடனேயெண்ணெய்
முனைகெட்டுப்போகுமரையாப்புக்கேளே. 236

கேளப்பாவுப்புடன்வெள்ளறுகுவைத்து
கெடியாகக்கசக்கியே வில்லைதட்டி
தாளப்பாமுன்னெரித்த யெண்ணெய்தன்னை
தடவியேவில்லையும்வைத்திருகக்கட்டி
நாளப்பாவறிந்திந்தப்படியேசெய்தால்
நாடாதுடாரரையாப்போடிப்போகும்
மாளப்பாபுளியுப்பு புகைமூன்றுகா
மைந்தனேவென்னீரோடன்னங்கொள்ளே. 237

அரையாப்புக்குபத்து.

கொள்ளுமுப்புரமெரித்தான் லிங்கப்பட்டை
 கூட்டுகருஞ்சூரையின்வேர்சமனுகத்தான்
துள்ளுகொடிக்கள்ளுவதக்கிச்சாறுவிட்டு
 துடர்ந்தரையாக்கடிகைவழித் தெடுத்துக்ரழகூண்டு
தெள்ளுமரையாப்பிலறைந்திடுநாளாறு
 செந்தணலிலிட்டமெழுகதுபோலாகும்
விள்ளுமிதுவென்குருவின் முறைபொய்யாது
 மீறுதேபுளிபுகையும் விளம்பக்கேளே. 238

காங்கைதவனம்ஊஷ்ணம்.

கேளுசிராமணக்கெண்ணெயாழாக்கைந்து
 கெடியானபுளியாரை வல்லாரைச்சாற்
வேளுபிரமிவழுக்கையீருள்ளிச்சாற்
 வெண்துத்திச்சாற்வகையொன்றுழாக்கொன்று
தாளுநிம்பச்சாறுழாக்குரண்டு
 சாதிக்காய்வால்மிளகு கடுக்காய்கிராம்பு
வாளுஞ்சீரகஞ்சன்னராஷ்டகமேந்தி
 வகையொன்றுபலமரைதான் பொடித்துகொண்டுண்ணே. 239

மேகம்பசிதீபனத்துக்கு யெண்ணெய்

கூட்டப்பாசட்டியிலிட்டடுப்பிலேற்றி
 கொதித்திடவேமெழுகுபதம்வடித்துக்கொண்டு
மூட்டப்பாயெண்ணெய் கழஞ்செடைதான் ரண்டு
 முனேந்திந்தப்படி யோர்மண்டலமேகொள்ளு
மாட்டப்பா காங்கையொடுதவனமூஷ்ண
 மகத்தானமேகமறும் பசியுண்டாகும்
நாட்டப்பாயிச்சாபத்தியமே காரு
 நாடாதேபழையதுவுநயந்துபாரே. 240

நீர்க்கட்டுக்குமருந்துகியாழம்

பாரடாபேய்த தம்பைச்சாறுழாக்குபன
 வெல்லம்பலமதிலும் பொடித்துப்போட்டு
கோரடாநாள்மூன்றிப்படியேசெய்து
 கொள்பரங்கிப்பட்டைதும்புராஷ்டஞ்சுக்கு

தோடாவகையொன்றுவிராகன்தூக்கி
சொல்லும் நீர்விட்டுகியாழத்தைக்கொள்ளு
நீரடாகட்டுதல் விட்டிழியும் பாரு
நினைவாகப் புளியுப்புயுகையுந்தள்ளே. 241

குளிர்சுரத்திற்கு கியாழம்

தள்ளப்பாபூநாகம்பலமே தூக்கி
சட்டியினிலிட்டெரித்துச் சாம்பலாக்கி
உள்ளப்பாமாலாழாக்காவின்பால்விட்
டூறவைக்கச்செய்தொருவுழக்காக்காய்ச்சி
மெள்ளப்பா யிப்படிநான் மூன்றேகொள்ளு
மீறியதோர்குளிசுரமு மில்லையில்லை
கொள்ளப்பாபொரிமிளகு நீரோடன்னங்
குறியாதேபுளிபுகையுந்தள்ளிப்போடே. 242

சீதம்வயிற்றுளைவு உதிரபேதிசுராணியானகடுப்புசுக்குகளி.

போடப்பாவெள்ளெருக்கின்பட்டை
சுக்குபூண்டுடனேவகைக்காற்பலமே
பொடித்து கூட்டப்பா அப்பதுயீராழிவிட்டு
குறையாமல்நாலி லொன்றாகக்காய்ச்சி
காட்டப்பாயிப்படி நாள்மூன்றேகொள்ளு
நாடாது குளிர்சுரமும்நசித்துப்போகும்
தேடப்பா பொரிமிளகு நீரோடன்னஞ்
சேராதே புளிபுகையுந் தெளிந்துகேளே. 243

மேளப்பாயிஞ்சி யெடைபலமெட்டைந்து
கெடியானதேலாகற்றிவில்லை செய்து
தாளப்பாயாவின்பால்படிதான்விட்டுத்
தவறாமல்விடித்து நிழலுலர்த்திப்போடு
தூளப்பாசெய்பலமூவேழுசீனதொந்தித்துப்
பலமிடைமண்டலமேகொண்டால்
வாளப்பாகுலைநோய்வு வாய்நீர்பித்தம்
வயிற்றுநோய்பொருமல தூவாங்கிப்போமே. 244

போமடாகிலைக்குமிழினிலையுஞ்சுக்கு
புத்திரனேவகைக்குக்காற்பலமே தூக்கி
ஆமடாசட்டியிலிட்டடுப்பிலேற்றி

அப்புழக்கிட்டரையாமாக்காய்ச்சி
ஆமடாயிருபொழுதுயிருநாட்கொள்ள
தரியாது அட்சரமுந்தவறிப்போகும்
நேமடாவெண்ணீரோடன்னங்கொள்ளு
நினையாதேபுளிபுகையுந்தள்ளிப்போடே. 245

## வேறு

போடப்பா அதிவிடையஞ்சிறுநாகப்பூ
போஸ்தக்காய் கற்கடகசிங்கிராம்பு
ஆடப்பா சாதிபத்திரி சாதிக்காயும்
அதிமதுரம்வகையொன்று பலங்கால்சுக்கு
நாடப்பாபலமொன்று கூடப்போட்டு
நல்லபனவேர்கியாழற்தாலாட்டி
சாடப்பாபணவிடைமுன்னபினிசேர்த்து
சட்டியிலிட்டெரித்துகளிகிண்டிடாயே. 246

கிண்டிடாய்பசுவினெய்விடுபத்தாமல்கேள்
புன்னைக் காயளவுயிருபோழ்துந்தான்
திண்டப்பாயிப்படியே நாளோராறு
சீதம்வயிற்றுளவுதிர்போதிக்கிராணி
விண்டப்பா ஆசனக்கடுப்புதெறிகெட்டோடும்
விளம்பியதோ ரென்குருவின்முறைபொய்யாது
கண்டடாசொல்லுகிறேன்செய்துபாரு
காரமாய்த்ததிதயிரோடன் னங்கொள்ளே. 257

## தாளகபற்பம்.

கொள்ளடாபலமைந்து சுண்ணத்தின்கல்
கூடப்போடிரைந்துபலம்பாண்டத்தில்
உள்ளடாதாளகத்தின் பலமோரைந்து
வுத்தமனேதோளேந்திரமாகக்கட்டி
தள்ளடாபொடிசலமொன்றிடுவாய்ச்
சட்டிதவறாமல் சீலைமண்ணடவாச்செய்து
மெள்ளடாவடிப்பிலவைத்தெரிநாற்
சாமமீறுதுகளங்கமறுஞ்சுத்தியாச்சே. 248

ஆச்சப்பாதொடுசிணுங்கியமுரிவிட்டு

அப்பனேயிடித்துரசம் படிதான்வாங்கி
மூச்சப்பாசுருக்கைந்தாற்கடுகைமட்டு
முன்னிலையாட்டிக்கலமும் வழிப்பாய்ச்செய்து
மாச்சப்பாவைந்தெருவிற்புடமீராறு
கையாவின்சாணத்திற்சமனென்றென்று
பாச்சப்பாபுளிபரணிநீருள்ரண்டு
பக்குவமைந்தாற்கடிகையெரித்திடாயே. 249

எரித்திடாயொன்றுமணியொன்றும்பற்ப
மிருபொழுதுபொற்பணத்தினிடைபைத்தூக்கி
குறித்திடாய்திரிகடுகு தேனிஞ்சிச்சாற்
கோதைமுலைப்பால்நெய்யோடனுபானங்கொள்
நிறுத்திடாய்சன்னிசுரமிருமலீளை
நெஞ்சுகுத்தலுப்பிசமந்தாரகாசம்
தரித்திடாயிளப்புமேல்சுவாசகாசந்
தீருந்தானிசப்பத்தியமேகார்த்திடாயே. 250

அபலிரேகசேந்தூரம்.

கார்த்திடாயப்பிரேகபலமோரைந்து
கரிசலாங்கண்ணிரசம்விட்டரைசாற்சாமம்
பார்த்திடாய்மெழுகதுபோல் வில்லைதட்டி
பக்குவமாக்கதுரொளியிலுலரச்செய்து
ஏர்த்திடாயைந்தெருவிற்புடமேசெய்து
யிப்படியீரைந்துபுடஞ்செந்தூரிக்கும்
ஆர்த்திடாய் திரிகடுகுதேனிஞ்சிச்சா
றுவினெய்யனுபானமறிந்துகொள்ளே. 251

கொள்டப்பாபணவிடைதான் விஷபாகங்கொள்
குத்திருமல்சாமீளை காசங்குன்மம்
மெள்ளப்பாசன்னிசுரமிளைப்புமூர்ச்சை
விட்டகலுமென்குருவின்முறைபொய்யாது
தள்ளப்பாபுகைபுளியுந் துரோதாயிமாய்கைச்
சாதிக்காய்பொரிமிளகுநீர்நெய்யன்னம்
உள்ளப்பாவென்னீராற்க்கால்சுத்தி
யுத்தமனேயொன்றுகாதறிந்திடாயே. 252

## பூநாகபற்பம்

அறிந்திடுநாகரவண்டோட்பலமோராறு
அப்பனேசத்திச்சாறணைசாற்விட்டு
தெரிந்திடுகடிகையுமோரைந்தாருட்டி
திரட்டியே மயனம்போலெடுத்துக்கொண்டு
விருந்திடுஞ்சட்டியிற்கிண்ணம்போல்வைத்து
மீறிப்பூநாகமிடைபலமூன்றென்றிற்
செறிந்திடுபரு சாமந்தானும்நல்க
சுத்தியுமீதச்செடுத்துக் கழுவிப்போடே 253

போடப்பாமுன்னமந்த கவசத்துள்ளே
போட்டவுடனம்மருந்தைமேலேதப்பி
மூடப்பாமேலொருசட்டிவாய்சந்து
மூவொன்றுசிக்கமண்செய்தெரிநாற்சாமம்
ஓடப்பாமேல்வெளுத்தால் பற்பமாகு
முத்தமனேபொற்பணத்தினிடையேதூக்கி
நாடப்பாதிரிகடுகுதேனிற்கொள்ள
நாடாதுசுரஞ்சன்னியறுகும்பாரே. 254

## வாதகேசரியெண்ணை.

அறுகுசிவனார்வேம்புகீழ்க்காய்நெல்லி
யாதண்டைசிவகரந்தைபூவந்திசந்தி
திருகுயிலைமடற்சதுரக்கள்ளிகள்ளி
தேள்கொடுக்குமூக்குரட்டைநாகைவாகை
வருகுமரிகரிவேலாமணத்தக்காளி
வண்டுகொல்லிபவழமல்லிவன்னிசின்னி
பெருகுநிலத்துளசிமகிழுங்குமிளம்வெள்ளிண்டு
பெருகுசெருப்படைவுரியறிந்திடாயே. 255

அறிதிங்டமயிற்கொன்றை பிரமிவேணி
அமுக்கராகோவைகருநொச்சில்விச்சி
தெரிந்திட்டமருக்காரைபூனைக்காலி
தேற்றும்பொன்னாவாரைகாரைசூரை
சொரிந்திட்டபொன்முசுட்டை குளகன்சுண்டை
தூதுவளைநாயுருவியாணைவோணு

விரிந்திட்டயேராழுஞ்சில் மயில்மாணிக்கம்
வெள்ளறுகுமாவிலிங்கு விழுதிசேரே. 256

சேரப்பாகிளுவைவிளாதுளபம்
வில்வஞ்சிய்யரசேமுள்ளிகொடிவேலிநீலி
பாரப்பாபேய்மிரட்டி குட்டிவிளாவும்
பரிவானமிளகருணைசங்கங்குப்பி
கூரப்பாசதகுப்பைவிஷ்ணுமூலி
குப்பையுடநாயுருவிமூக்குரட்டை
நேரப்பாகழற்கொட்டி கண்டங்கத்திரி
நீர்முள்ளிசெம்பருத்திவிரண்டைவாங்கே. 257

வாங்கடாபேய்க்குமட்டி நிலயாவாரைமந்தாரை
முன்னைபேராமுட்டிக்கொட்டி
ஓங்கடாவெள்ளறுகுபில்லிநெய்சுண்டி
யோரிலைத்தாமரைக்குவளைகுறிஞ்சாகஞ்சா
வேங்கடாகொடிமுந்திரிகொட்டைக்கரந்தை
விடத்துவரைவிடத்தாரைதிராயுழலத்திதுத்தி
ஆங்கடாவெள்ளைச்சாரணையுத்திராட்சம்
ஆடுதின்னாப்பாளைவறபசுண்டிநோக்கே. 258

நோக்கப்பாபூவரசு தழுதாழை வெண்ணொச்சி
சிறுகீரைமுட்காவேளை தாழை
தூக்கப்பா பொடுதலைபொற்றலைமால்
கிராந்திதுய்யதாமரை செங்கத்தாரிசூரி
தாக்கப்பாகடலிழுஞ்சி யாடாதோடை
தண்ணிமிட்டான் கிழங்குகொஞ்சியிஞ்சி
மேக்கப்பாசிவதையெலிசண்டிச்சாலை
வெணகட்டுக்கொடிவாடாமல்லியேத்தி. 259

ஏத்திட்டகுடைமல்லி யிருவம்பீங்கா
னிலந்தைபிராய்குறுந்துராய்லெப்பையப்பை
மாத்திட்டபெருங்குறிஞ்சா நிலவேம்புவுத்தாமணி
மருதமருள்பொன்னாங்காணிதானும்
பார்த்திட்டவனத்துளபமருக்காயம்மான்
பச்சரிசிகருங்காக்கை கோலத்தியித்தி

போர்த்திட்டதென்னை பனைகரிசிலாங்கண்ணி
பூனைக்காஞ்சொறிபுள்ளடியுங்கூட்டே. 260

கூட்டப்பாசிறுநங்கைகுளப்பாசி
செம்முருக்காவாரைகோரைபூலா
பூட்டப்பாஆகாசகெருடனெல்லி
புடபத்திரமகிழங்கருஞ்செம்பைத்தும்பை
மாட்டப்பா பெருந்துநீர்பச்சைவாகை
மாசற்றசிளாஞ்சரிபேயத்திசத்தி
நாட்டப்பாபுரசுபற்படாகம்வெட்டாலை
நருவிளிகாட்டுத்துவரைசீலம்பேணே. 261

பேணப்பாதிருவாத்திதுருஞ்சிநாணல்
பூத்தகரப்பான்முருங்கைவிலாரிநாரி
காணப்பாபெருமரத்தாள் பெருங்காயங்கத்திரி
நாயசம்வரப்பூலாநீர்பூலாவும்
கோணப்பாகிரந்திநாயகம் வல்லாரை
தொடுசிணுங்கியின் பூராசெவ்வந்திநந்தி
ஊணப்பாவெம்பாடம் செம்பொன்ஹகை
ஹூசிமல்லிவாதரசுசடச்சிநேரே. 262

நேரடாசுடுதுரத்திசங்கங்குப்பி
நிலப்பனைமுன்னைநெரிஞ்சிநாய்வேளை
பாரடாபெருங்கொத்தான் கிடாரநார்த்தை
பழம்பாசியிலுப்பைமரமஞ்சள்
சேரடாவொதிதவசுமுருங்கைதாளி
சிறுகிளாபசளைபுனலித்தண்டுபாண்டு
மாரடாயீசுரவேர்நாகமல்லி
மலைவேம்புமுள்ளிலவு நெருஞ்சிபோடே. 263

போடடாயெலுமிச்சைகறுப்புக்குன்றி
புசுழானவரசுசக்ரகொன்றைபண்ணை
கூடடாகானகத்துக்கரணைவெள்ளை
குன்றைவிலாமிச்சமரிநெல்லு
சாடடாசென்னெரிஞ்சிநுணுநல்வேம்பு

தவறுதுமருந்ததனை வெள்வேலுஆலு
தேடடாபுளியாணிவெள்ளைக்கரக்கை
சிந்திக்கும்நிலக்கடம்பு சேர்த்திடாயே. 264

சேர்த்திடுபுளியாரை நீர்மேல்வன்னி
செங்கமலங்கொள்ளுக்காய்வேளைபூளை
பார்த்திடுதலைச்சுருளியிலவோடும்வேர்
பண்பாடலாத்திராவிஷ்ணுகாந்தி
தூர்த்திடாய்நிலைவேம்பு மலைவேம்போடு
சொன்னகண்டங்கத்திரிசமூலத்தோடு
கார்த்திடுவேருவகை பலந்தானொன்று
பூசனைசெய்தங்குலங்கொய்திட்டுக்கேளே. 265

கேளப்பாவதிவிடைய மக்கராகாரங்
கெடிவசம்புமுளகரணைகருஞ்சீராசீரா
தாளப்பாசிறுதேக்கு காட்டாத்திப்பூ
சதகுப்பையதிமதுரங்கிராம்புசோம்பு
வாளப்பாபெருலவங்கப்பட்டையோமம்
வாய்விளங்கத்திப்பிலியின் மூலமேலம்
வேளப்பாசாபரங்கி பட்டையேல
மசிதிப்பிலிவால்மிளகுசேரே. 266

சேரடாரோகணிகார்போகஞ்சுக்கு
செவியமுடன்தாளிசபத்திரிசாதிபத்திரி
பாரடாபேரரத்தை சிறுநாகப்பூ
பருங்கடுக்காய் சாதிக்காய்மாசக்காய்
ஏரடாகண்டதிப்பிலிசேங்கொல்டையீ
சுப்போல்வெந்தயஞ்சன்னராஷ்டகோஷ்டம்
மாரடாகற்கடகசிங்கிதக்கோலம்
வாளங்கோரோசினைகுராசானியாமே. 267

ஆமப்பாயெள்ளுள்ளி யீருள்ளிமல்லி
அப்பனேபலமானதான்வகையொன்றுக்கு
தாமப்பாபொடித்தேமுன்வேரிற்போட்டு
சங்கரனைப்பூசித்து வாமணக்கோடெண்ணெய்

நேமப் பாயோட்டிரெட்டி விட்டேகட்டி
நிழலாகக்கதிர்புடமண்டலமேவைத்து
ஓமப்பாயெண்ணெய்பல மிருபோழ்துந்தான்
ஓகோகோமண்டலமிப்படியேகொள்ளே. 268

கொள்ளடாகுடல் பிரட்டுகைகால்குத்தல்
குடிவாத மிடுப்புத்தொடைகெண்டைவாதம்
மெள்ளடாதிமிர்பெருநோய்குஷ்டஞ்
சூலைவெடிமேகங்கடிகுடைச்சல்யோனிச்சூலை
உள்ளடாவுதிரஞ்சீழ்முளைமூலந்தா
னேடிடுமேகாக்கைவலி மூர்ச்சைவாய்வு
தள்ளடாபுளிபுகையும்வென்னீரன்னஞ்
சாதிக்கநோய்பலவுஞ்தீரும்பாரே. 269

## மேகசஞ்சீவிதயிலம்.

பாரப்பாமுசுமுசுக்கைகரிசலாங்கண்ணி
பழப்பாசிகருநொச்சிவன்னிசின்னி
சேரப்பாகருந்துளசியம்மான்பச்சை
திருநீற்றுப்பச்சைப்பொன்னுங்காணித்தான்றி
நேரப்பாவாதரசுகீழ்க்காய்நெல்லி
நிலப்பனைசிய்யாவுயிலங்காரைசூரை
கோரப்பாவகிலுதிர வேங்கைக்கொம்பு
குடம்விரைவெள்ளறுகுநந்திகூட்டே. 270

கூட்டிடுவாய்பூவரசுவில்வஞ்சங்கு
கோரைகருவேப்பிலைவெண்ணொச்சிவிச்சி
மாட்டுவாய்மூக்குரட்டையிலவுதேத்தா
மாதளைசெம்முள்ளியாதண்டைசுண்டை
மூட்டிடுவாய்வெள்ளெருக்குகளச்சிசித்தா
முட்டிக்குக்கா மணத்தக்காளிதாளி
போட்டிடுவாய் முடக்கொத்தான் விருவம்பீங்கான்
பொன்னவாரைச்சடைச்சி வேளைகேளே. 271

கேளடாயிலந்தைமகிழ்நாகமல்லி
கிளுவையெலுமிச்சைப்பார்வெட்டிகொட்டி

வாளடாதூதுவளை கண்டங்கத்திரி
வாடாதமல்லிகைவெள்வேல்பூலா
வேளடாகுமிழ்சென்னயுருவி மஞ்சள்
வெண்கொள்ளுகாவேளையாணயூண
தாளடாமிளகருணைசங்கங்குப்பி
தண்ணிமிட்டான்கிழங்கும்பூாவாங்கே. 272

வாங்கப்பாதழுதாழைசெப்புநாகை
வாதநாராயணன்மயிற்கொன்றையும்
பாங்கப்பாசிறுகுறிஞ்சாபிரசுஆயில்
பாவட்டை யழிஞ்சிதுராலப்பையப்பை
ஓங்கப்பா ஆவகரை தண்ணிப்பூளை
யோரில்லைத்தாமரைமுக்காவேலை
ஆங்கப்பாவெண்குன்றிமுன்னைவேளை
யமுக்கராசெம்பருத்திகொஞ்சிநேரே. 273

நேரடா கருஞ்செம்பையூமவாத்தி
நெய்ச்சுண்டி யத்திவண்டுகொல்லிநெல்லி
சேரடாவெண்காக்கைகுரட்டையெட்டி
செங்நெருஞ்சிதுதிசெங்கத்தாரிசூரி
பாரடாபூவந்திபூளைக்காலிபாலை
மருக்காரைபுனலித்தண்டுயிண்டு
மாரடாநீலிபேரா முடடிக்கோரை
வகையொன்றுக்கோர்பலம்வேர்வாங்கித்தட்டே. 274

தட்டடாபெரும்பாண்டத்திலிட்டேகேளு
தவறாமல் கணபதியைப்பூசித்தேதான்
எட்டடாசெவ்விளநீரதிலுட்டாட்டி
யெரிவிட்டுப்படியோடுரண்டிறுத்துக்கொண்டு
கொட்டடாயாவின்பால் படிதான்ரண்டு
கூடச்சேரெள்ளெண்ணெய்படிதான்ரண்டு
விட்டப்பரகதிர்புடத்திலொருநாள்வைத்து
மேலோடுங் கடைசரக்கு விபரங்கேளே. 275

கேளப்பாவதிமதுரஞ்சிறுநாகப்பூ
கெடியானமிளகுசன்னராஷ்டங்கோஷ்டம்

வாளப்பாசிறுலவங்கப்பட்டைசுக்கு
வால்மிளகுபேருரையானகிராம்புசோம்பு
வேளப்பாகண்டதிப்பிலிமாசுக்காய்
வெண்மிளகுகுராசானியோமமோமம்
தாளம்பாசிறுதேக்கு கடுக்காய்பிஞ்சு
சதகுப்பைதிப்பிலியின்மூலம்போடே. 276

போடுகருஞ்சீரகம்பூலாக்கிழங்குபூண்டு
நற்சீரகந் தக்கோலமேலம்
நாடுதாளிசப்பத்திரியக்கராகார்போகங்
கொத்துமல்லி தாமரைவிந்துநீரடிமுத்து
கூடுமேமாசக்காய்தான்றிதானும்
குறிப்பாக சமமிடைக்கூடச்சேர்த்து
ஆடும்வகைக்கொன்றுபல மரைதான்தூக்கி
அப்பனேபொடித்திட்டுயெரித்திடாயே. 277

எரித்திடுவாயடுப்பேற்றிமெதுவாகத்தானிரும்பிலி
ஞெருவிறகாலிருநாற்சாமம்
குரித்திடுவாய்மெழுகுபதமெரித்துவாங்கி
குங்குமப்பூபத்திரிமலாக்காய்சாம்பிராணி
நெரித்திடுகோரோசினைமாஞ்சிசாதிக்காய்
நிரைகையோர்பலமரைதான்பொடித்துப்போட்டு
விரித்திடுநெற்பாண்டத்தில்நாளேளெட்டு
மேலோடுவெல்யோனெதிரேவைத்துத்தாடே. 278

ஆடப்பாஆதிகணேஸ்பரனைப்போற்றி
அனுமார் வேதவியாசர் அஸ்வத்தாமா
நாடப்பாகிருபையுடன்பரசுராமர்
நற்குணவிபீஷணர்மாபெலிச்சக்கிராதி
தேடம்பாசிரஞ்சீவியேழுநாமத்தியான
தெளிவாகப்பூமியிலேபுள்ளிருத்தி
கூடப்பாடுவிரலாலொன்றுயாட்டி
கூட்டியேதிராசறையகத்துவையே.

வையடாமூன்றுவிசைவலுவாய்த்தேய்த்து
மாறுமல்திருநலங்குவென்னீர்மூழ்கு

செய்யடாபுதன்சனிமண்டலமோரண்டில்
செவிமறைத்தல்சொரி பெருநோயூறல்குஷ்டம்
பையடாகுருதிசலமடப்புநாறல
பச்குசிராப்பீனிசங்கள்கபாலசூலே
பொய்யடாசொல்லவில்லைநேரிலுறும்
போய்விடுமேபெண்மயக்கந்தள்ளிக்கேளே. 279

## எட்டுவாரத்திற்குமுருக்கு.

கேளருக்கன்பலந்தானழகைமாற்றுங்
கெடியான திங்கள்பலன்பொருளுண்டாகும்
பாளுசெவ்வாய்பலந்தானுயிரைமாய்க்கும்
பாங்கானபுதன்பலந்தான்மதியுண்டாக்கும்
தாளுவியாழப்பலன்றான்கருத்தைப்
போக்குந்தப்பாது வெள்ளிபலன்
கடனேசெய்யுங்காளுஞ்சனிப்பலந்தானெண்ணெய்
மூழ்க நற்பொருளுஞ் சந்தானம்வ ரஞ்சாதிப்பாயே. 280

சாதிக்குங்கீழ்திசைசம்பத்துண்டாகுந்
தவறுதென்கீழ்திசைசஞ்சலமேசெய்யும்
ஆதிக்குந்தென்றிசையாயசுவர்த்திக்கும்
ஆகாதென்மேற்றிசைகைப்பொருளேசேதம்
வாதிக்குமேற்றிசைமத்திபமேநோயாம்
வடமேற்குயில்லம்விட்டதுவேயோட்டும்
சோதிக்கும்வடதிசை மத்திபமேசாவாஞ்
சொல்லரிய வடகிழக்கு வுத்தமந்தான்பாரே. 281

## மகாகோடாசுளிகுளிகை.

பாரப்பாயரிதாரமிரதம் நாலேந்துமைந்தனே
பெருமைமலங்கரைத்தோர்சுத்தி
சேரப்பாகெவுரிலிங்கஞ் சுரக்காய்கெந்தி
திப்பிலிவெண்காரமுமக்கராகாரம்
நேரப்பாயிருவி கடுக்காய்தான்றிநெல்லிக்
காய்கெந்தியன்னபேதிசுக்கு

மாரப்பா கடுகுரோகணிநாலேந்து
  வகையொன்றுகழஞ்சியெடைநிறுத்துவாங்கே. 282

வாங்குவாளங்கழஞ்செடைதோடகத்துள்
  முளையுமபோக்கிபசுவின்பால்விட்ட
பித்தமருதோடொக்க ஒங்குவெண் ணெச்சிளைச்சாற்
  நாள்மூன்றூட்டி வுத்தமனேயிருவிலியுங்
கூடச்சேர்த்து பாங்குடையநாயியரிதாரங்கெந்தி
  பக்குவமாய்த்தூளித்துப்பதமாய்ச்சேர்த்து
நீங்குடையதாளிசமுந் துய்யசுக்கு
  நேர்ந்தஅடைக்காய் வெள்ளிச்சாற்மூன்றூட்டே. 283

ஆட்டிவெண்சிந்திலேப்பாலாநாண்மூன்று
  ஆட்டுப்பாலோயாமலரைநாண்மூன்று
கூட்டியாமணக்கெண்ணெய் கரத்திற்பூசி
  குளியடாசிறுபயர்போலுருட்டிப்போடு
வாட்டுநீநிழலதிலே யுலர்த்திக்கொண்டு
  மகாகோடாசுழிகுளிகையுடனேதூபங்
காட்டிநற்றும்பைச்சாறனுபானங்கொள்
  கனமானவாதமெல்லாங் கழன்றுபோமே. 284

அநுபானம்.

போமப்பாகதலிப்பழமுசுட்டைச்சாறும்
  புத்திரனே பால்சீனிகுடிகையாட்டி.
தாமப்பாவைங்கரணேப்பூசைபண்ணிச்
  சாதிக்கப்பித்தமதுதவறிப்போகும்
ஆமப்பாகொண்டுநீரனுபானங்கொ
  ளப்பனேடுசத்துமந்தானழிந்துபோகு
நேமப்பாசூரிரசத் தனுபானங்கொள்
  நில்லரிதுவாதசுரம்நீங்கிப்போமே 285

போமடாமுசுட்டைச்சாறனுபானங்கொள்
  புத்திரனேபித்தசுரம்நிலேகெட்டோடும்
ஆமடாதோடைச்சாறனுபானங்கொள்
  ளறியேசேத்துமத்தின் சுரம்விட்டோடும்

நேமடாமுலைப்பாலி லனுபானங்கொள்
நில்லரி துநில்லா துசன்னியோடும்
தாமடாவுள்ளிரசத்தனுபானங்கொள்
தரியா துவா தசன்னிமேலும்பூசே. 286

பூசுநுணுச்சாற்றிலேயனுபானங்கொள்
புலம்பியதோர்பித்தசன்னிபோகும்போகும்
மாசுவதுபூசினிநீரனுபானங்கொள்
மகத்தானசேத்துமத்தின் சன்னியோடும்
பீசுவதுதவரைரசத்தனுபானங்கொள்
பிசாகாதுவெறிசன்னி பின்விட்டோடும்
பாசுவதுவேம்பரசத்தனுபானங்கொள்
பெரநதிச்சன்னிபார்த்திடாயே 287

பார்த்திட்டமுலைப்பால்விட்ட னுபானங்கொள்
பற்கிட்டுகுளிர்சன்னிபதிவிட்டோடும்
பேர்த்திட்டகுமதையிநீரனுபானங்கொள்
பிசகாதுகுன்மமறுத்தீருந்தீரும்
போர்த்திட்டநன்முருங்கைப்பட்டைதட்டி
புட்டடிவித்துநீரனுபானங்கொள்
சார்த்திட்டவாதகுன்மந் தவறிப்போகுந்
தள்ளுதள்ளுபுளிபுகையுஞ்சாதிப்பாயே. 288

சாதியடாவுமிக்கருகில் சலம்விட்டாட்டித்
தண்ணீராய்வடியதுசெய் தனுபானங்கொள்
சோதியடாபிற்தகுன்மந்தீருந்தீருஞ்
சொற்பனத்திலுப்புளியும் புகையுந்தள்ளு
வேகியடாபத்தியமோவொன்றுமில்லை
விரும்பியேமற்றதெல்லாங் கொள்ளுகொள்ளு
பேதியடாவேளைரசத்தனுபானங்கொள்
பித்தெரிவுகுன்மமறுந்தகலும் பாரே. 289

பாரப்பாமாவிதிங்கப்பட்டைவெட்டி
பக்குவமாய்ச்சாற்பிழிந்துவனுபானங்கொள்
போமப்பாயில்லாதுவயிற்றுநோயும்

பேர்பெரியபுளிபுகைபுந்தள்தள்ளு
ஓமப்பாவின்வத்தில் பருத்திக்கொம்பு
வென்னீராலாட்டிரசத்தனுபானங்கொள்
தேமப்பாவுள்ளித்தயிலத்தனுபானங்கொள்
தெரிவிகட்டுவோடும்வறட்சூலேகேளே. 290

கேளுபார்போகமிடித்தனுபானங்கொள்
கொடும்பக்கசூலையறும் புளியுந்தள்ளு
ச்ராளுபாகலிலேச்சாற்றிலனுபானங்கொள்
சாதித்தார்கெற்பத்தின்சூலைதீரும்
வாளுசிறுகீகையுங் குடக்கால்சேர்த்து
மைந்தனேயிடித்துரசத்தனுபானங்கொள்
வேளுகெற்பத்தில்விப்புருதிதீரு
மீருதுபுளிபுகையும் விதமாக்கூட்டே. 291

கூட்டப்பாமரிமஞ்சள் சாற்றிலேதான்
கொள்ளவேயடிவயிற்றுக்கவுசைநீங்கும்
மாட்டப்பாபாகலிலேச்சாற்றிலனுபானங்கொள்
வாங்கிபோம்மவப்புளியுப்பில்லை
ஆட்டப்பாசந்தனநீரனுபானங்கொ
ளன்றுசெரியாகுன்மமழிந்துபோகும்
காட்டப்பாபீலிகைக்கு யிப்படியேகொள்ளு
கடுந்தரசன்பிளவைக்கிப் படியேதாக்கே. 292

தாக்குபொன்னுங்கணிய னுபானங்கொள்
தொந்தித்தமேற்பிளவையுலர்ந்துபோகும்
நீக்குமேதைதத்தயிர் விட்டிழைத்துப்பூசில்
நில்லரிது சீப்பிளவை நீங்கிப்போகும்
வாக்குபொய்யாதொருநாளுமிதிற்பாகந்தான்
வகையதவேசெப்பினேனிந்தமார்க்கம்போக்கும்
நீலிச்சாற்விட்டிழைத்துப்பூச
பொரிந்துகுதியடுப்பிளவைபோகுங்காணே. 293

காணப்பாவோமச்சூரணமேசெய்து
கைகண்டகுளிகையுமொன்றதிலேசேர்த்து

ஊணப்பாயிருபோழ்துயிப்படியேகொள்ளு
வுத்தமனேகவுதும்மையெருக்கன்பாலும்
தோணப்பாஆட்டிரிணமதிலேபோடு
தொங்கித்தமேகவெடிதுலேந்துபோகும்
ஏணப்பாயெருமைமீரதிலேயாட்டி
பிழிந்திட்வேகாதிரைச்சார்போகுங்கேளே. 294

கேளப்பாகீழ்க்காயிநெலலிச்சாற்தனனில்
கெடியானகுளிகையொன்று பொடித்துப்போட்டு
நாளப்பாமுன்றிதுவே பிழிந்திட்டாக்கால்
நாடாதுசெவிப்புழுவுமரித்துபோகும்
தாளப்பாசங்கிலேச்சாற்குளிகை
யாடிதான்பிழியக்காதுவலிதவறிப்போகும்
வாரப்பாகருவேலம் பட்டைற்சாற்றில்
மகத்தானகுளிகையிழைத்திடுபத்தே. 195

பத்தடாவெள்ளாட்டிநெய்விட்டாட்டி
பார்த்திடுவுண்ணுவினிலே சிறுத்துப்போகும்
மெத்தடாகுளிகமனோசிலேயுங்கூட்டி
யெருக்கம்பால்விட்டரைத்துதுணிமேலூட்டி
சுத்தடாதிரிபுகையுண்ணுவிற்குவிசுட்ட
வுடனிருமலுஞ்சுருக்கிப்போகும்
முத்தடாதுடைச்சாற்றிலனுபானங்கொள்
முதிர்ந்துவருஞ் சிலந்தியெல்லாமுதிர்ந்துபோச்சே. 296

போச்சப்பாசங்குபழச்சாற்விட்டாடிப்
புண்ணிலிடவடுத்தடுத்துப்பொருந்திப்போகும்
மூச்சப்பாநற்கோழிகாரஞ்சுட்டு
முன்னென்றுபின்னாமத்தைச் சாற்றுலாட்டி
பாச்சப்பாகுமரகண்டன் வலிக்கும்போது
பக்குவமாய்க்கண்ணிலிப்படிதான்மூன்று
கூச்சப்பாமுலேப்பால்செம்பருத்திப்பாலுங்
கூடிநசிக்கிப்பிழிந்து நிறுத்துப்போடே. 297

போடப்பாகாடியிலேமெழுகுளிகைகொள்ளப்
பேதியில்பெண்ணிட்டமருந்தெல்லாம்வீழும்
கூட்டப்பாசுட்டுகடுக்காயின் தூளுங்
குளிகைபத்துவுப்புபத்து மிளகுபத்து
நாடப்பாவின்வெண்ணெய்கூடப்போட்டு
நன்ருகவரைத்தெடுத்துப் புண்ணிற்போடு
சாமப்பாபுழுவுசிலந்திநில்லாது
தவரிப்போகுஞ்சத்தியமென்றறிந்திபாரே. 298

பாரப்பாசெருப்படையின் சாற்விட்டாட்டி
பக்குவமுள்ளுக்குக்கொடுத்துமேனிச்சாற்றிற்
சேரப்பாகுளிகையுமொன்றிழைத்துப்பூச
தெறிக்கும்ண்டை கரப்பன் செய்தேபாரு
வேரப்பாபிரண்டைச்சாறகுளிகையென்று
யிழைத்திடுபல்விப்புருவிலகிப்போகும்
வேரப்பாநாரத்தம்பழச்சாறதன்னில்
நசியமிட்டோர்தலையின் வலியைமாத்தே. 299

மாத்தடாகரிப்பான்சாறனுபானங்கொள்
மண்டலத்திற் கருங்குட்டம்வாங்கிப்போகும்
ஏத்தடாகருநகோழிகாரஞ்சுட்டு
யீரைந்துகுளிகைபொன்னூமத்தைச்சாற்றில்
தேத்தடாவரைத்துசிமிழ்க்குள்ளேவைத்து
யிடுகலிக்கம்பேய்ப்சாசு வோடிப்போகும்
பாத்தமுலைப்பால்செம்பருத்திப்பாலும்
பக்குவம்பின்கண்ணிலிடுபதனஞ்செய்யே. 300

செய்யப்பா மயக்கராதீண்டிற்ருனல்
திறமானவிழுதியிலேவேருங்கூட்டி
நையப்பாவரைத்துதடிவாயிற்பூச
நலமானகுளிகையினழத்திண்ணந்தீரும்
பையப்பாவெண்விரியன் தீண்டிற்ருனல்
பத்தரைசேருபடிசீரத்துளிழைத்துயிய்ந்து
மெய்யப்பாகுளிகையொன்றவூமத்தைச்சாற்றில்
வெண்ணெய்போலரைத்துடன்மேற் பூசத்தீரே. 301

தீராடாபெருவிரியன் தீண்டிற்றானல்
செருப்படைச்சாற்றிலிழைத்துள்ளேயீய்ந்து
பாரடாகடிவாயின்மேலேபூசு
பக்கென்றுவிஷமிறங்கிப்பயந்துவோடும்
வேரடாவுதிரமண்டிலிநான்தீண்டில்
விழுதியிலைச்சாற்றிலிழைத்துள்ளேயீய்ந்து
மாரடாகடிவாயிற்றடவிப்போடு
மகத்தானவிஷமிறங்கும் யாற்றிப்போடே. 302

போட்டடா சுருட்டையதுதீண்டிற்றானல்
புத்தெருக்குச்சாற்றிலிழைத்திடவேதீரும்
மூட்டடாதுளசிசத்தனுபானங்கொள்
மூன்றுநாள்முறைக்காச்சல் முன்கெட்டோடும்
நாட்டடாயிஞ்சிரசந்தனுபானங்கொள்
நாலாநாள்முறைக்காசல் நடுக்கல்தீரும்
ஆட்டடாமுறையொன்று குளிகையொன்று
ஆதிமுதலென்குருவின் முறைதப்பாதே. 303

வயிற்றுவலிகுன்மவாய்வுக்கவிழ்தம்.

தப்பாதுநிலக்கடம்பு ரசத்தைவாங்கி
தையலர்கள்கொங்கைமுலை தவிரப்பூசி
அப்பாதுசாரபிழிந்து தொனியில்விட்டாட்டி
யறிவாயிந்தப்படியே மூரைநாள்மூன்று
வெப்பாது யுருதினமுமிருமல்சூலை
விரியுமடாமடாதோளுவாயெண்டறியானைக்கி
மப்பாமிவங்கியடிவேர் தான்மூன்று
ஆதித்தநாளி லெடுகுளிசங்கட்டே. 304

கட்டடாமுக்காலுங் தண்ணீரோதி
கட்டிமுகத்திலிறைத்துக்ருக்கோள்மூட்டி
தட்டடா வுடலத்துரலரைத்துவாங்கி
செப்பரிகயெள்ளெண்ணெயிலேகுழைத்துள்ளீயந்து
கிட்டடாநெய்யிறைச்சிதயிருள்ளிகேத்தனம்
புளிபகைபுஞ்சேரொணாது விட்டடா

யிப்படிநாளொருமூன்றுள்ளே
விலங்கிருவாளுள்ளமுக்குவிழுகும் பாரே. 205

## வயிற்வலிகுன்மவாய்வுக்கவிழ்தம்,

### வேறு.

பாரப்பாவெள்ளறுகுயெருக்கம்பூவும்
பக்குவமாய் வகையொன்றுபலமெட்டைந்து
நேரப்பா முதிர்பிரண்டைபலம்நாளைந்து
நெடியெருக்கம்பழுப்புபலமீரைந்து
சேரப்பா கல்லுப்புபடிதான்ரண்டு
தேச்சுயாய்ந்து ஒமமணிபலமோரைந்து
மாரப்பாயிவ்வகையோராறுங்கூட்டி
மகத்தானபச்சைபோலுமிடித்தாங்கே. 306

வாங்குயெருக்கிலையிலெழுதொன்னே
தைத்துவளமானமருந்தெல்லாமதனுட்கட்டி
ஒங்குபெருங்கசபுடமிட்டெடுத்துத்
தூளாக்கியுத்தமனேபுதுகலசத்துள்ளவைத்து
பாங்குடெருந்துட்டிடைமுன்னிறுத்துப்போட்டு
பாச்சிடுவெண்ணெச்சியிலைச்சாற்நல்வேளைச்சாற்
ஆங்குநொச்சியிலைச்சாற் மேனிச்சாற்றி
லருந்தியிபொருமுதரைமண்டலமேகொள்ளே. 307

கொள்ளடாவயிற்றுவலிகுடைச்சல்வாய்வு
குன்மமோரெட்டதுவுங் குத்திட்டோடும்
மெள்ளடாஅகத்தியிலை கதலித்தண்டு
மிதிப்பாகற்பூசினிக்காயிறைச்சிமச்சம்
தள்ளடாபழையதுபால் புகையுமோருந்
தவருதுயென்குருவின் முறைபொய்யாது
உள்ளடாபத்தியமிப்படியேகாத்து
விறவாகக்கொண்டிடநோய்வொழுந்துபோமே. 308

### சுராங்கிஷக்குளிகை.

போமப்பாமடல்துத்தக் கழஞ்சிரண்டு
பொன்னரிதாரத்தினிடைகழஞ்சிரண்டு
ஆமப்பாபுளிபரணியதனைச்சுட்டு
ஆற்றியெடுசாம்பல்கழஞ்சிடைதான்ரண்டு
தாமப்பாபொன்னூமத்தைச் சாற்விட்டாடித்
தவருமற்குளிகைகுன்றிமணிபோற்செய்து
வாமப்பாநிழலதிலேயுலர்த்திக்கொண்டு
மைந்தனேசுபாங்கிஷமாய் குளிகைபாரே. 309

பாரப்பாவென்னீர்கொள்வதுப்புத்தீரும்
பருந்துளசிச்சாற்றிலிட்டத்தோஷந்தீரும்
நேரப்பா குளிர்சலத்தில்குளிகைக்கொள்ள
நில்லாது தாபசுரம்நிலைகெட்டோடும்
நாமப்பா திப்பிலிநெய்குளிகைகொள்ள
சன்னிசுரம்போம் புளிபுகையுந்தள்ளு
சேரப்பாபொரிமிளகு நீரோடன்னந்
திண்முருங்கையிலைமிளகும்பொரித்துக்கூட்டே. 310

### நேத்திரசூலைபடல்காசச்சிவப்புநீர்முட்டல் சூடுபுகைச்சலிதுக்குமாத்திரை.

கூட்டரைநெல்லிமுள்ளிதிப்பிலியின்துத்தங்
கெடிதான வதிமதுரம்வகையொன்றுக்கு
மாட்டடா கழஞ்சியெடையிந்துப்பொன்று
வகைக்கரைகழஞ்செடைநிறுத்துக்கொண்டு
ஆடப்பாபழச்சாற்றிற்சாமமேழு
அப்பனேமயனம்போலாகும்போது
நீட்டடாமாத்திரையொன்றதிலேசெய்து
நிழலாக வுலர்த்தியபின்னெடுத்துக்கொள்ளே. 311

கொள்ளிகையாந்தகரைமுலைப்பால்தன்னில்
குறையாமலிழைத்தரைமண்டலமிட்டாக்கால்
கொள்ளுநேத்திரசூலைபடலகாசஞ்சி
வப்புநீர்முட்டலறும்பிரகாசிக்கும்

துள்ளுமார் பிளேமிருங்கைச்சாற்தன்னிற்
 துடர்ந்தரைமண்டலமிருபோழ்துயிழைத்திட்டாக்
கால் உள்ளுசூடும்புகைச்சலொழிந்துபோகு
 முத்தமனேகைம்முறைதப்பாதுபாரே. 312

கணபூவக்குமருந்து.

பாரடாநற்றேனிற் சங்குநாலாட்டி
 பருங்குன்றிமணியதுபோலுரண்டுபோழ்து
நேரடாமண்டலந்தான்முழியிற்போடு
 நில்லரிதுநில்லநிதுபுவிவிட்டோடும்
மாரடாரோதாபிமாய்கைதள்ளு
 மகத்தானயென்குருவின் முறைபொய்யாலி
சேரடாயிளவெந்நீர்சாதங்கொள்ளு
 சேராதேபுளிபுகையுந்தள்ளிப்போடே. 113

அந்திநேரஞ்சுரத்துக்குகியாழம்.

போடப்பாநிலவேம்புமருள்கிழங்கு
 பேய்ப்புடலுங்கடுகுரோகணிபாவட்டை
நாடப்பாநெல்லிமுள்ளிசுக்கோடேழு
 நலமானவகையொன்றுகழஞ்சுவாங்கு
தேடப்பாநற்சலமீராழிவிட்டு
 தீராட்டியெட்டினிலொன்முக்காய்ச்சி
ஆடப்பாயிப்படிநாளைந்துகொண்டால்
 அந்திசுரம்விட்டகலுமறிந்துபாரே. 314

தாபசுரத்துக்குமருந்து
வேறு.

பாரடாசிந்தில்கொடிசாம்பல்செய்து
 பாங்கானபெருமரப்பட்டைசேவ்கொட்டை
நேரடாபாற்சொற்றிதீயின்வேரு
 நிலவேம்புபொற்கடுக்காய்முத்தக்காசு
சேரடாவகைக்கரைவிராகன்தூக்கி
 தெள்ளுபொடியெள்ளாழாக்குநீருங்கூட்டி

கோரடாநாளினிலொன்றுகாச்சிக்கொண்டு
யிருபோழ்துயேழுநாள்குணமுங்காணே. 315

காணப்பாதொந்தசுரம்கிலெகெட்டோடுங்
கனமான அஸ்திசுரமூனபின்போடும்
வீணப்பாபுளிபுகைபுந்தள்ளிப்போடு
மெய்யானசயப்போகம்நடையாகாது
ஊணப்பாபொரிமிளகுநீரோடன்ன
முத்தமனேவழுதலங்காய்பொரியல்கொள்ளு
பேணப்பாயென்குருவின் முறைபொய்யாது
பிரட்டில்லைநோயகலுமறிந்திடாயே. 316

நீரிழிவுக்குமருந்கு.

அறிந்திடும் பூவந்தப்பழங்கல்லுப்பு
அப்பனேயெள்ளெண்ணெயோடிம்மூன்றுங்
தெரிந்திடும்வகையொன்றுவிராகன்தூக்கித்
திறமாகவரைத்துயிருபொழுதுமேழுநாளுங்கொள்ள
யெரிந்திடுத்தாபசுரங் கழன்றுபோகும்
யேழுதின்ம்புளிபுகையுந் தள்ளுதள்ளு
பறந்திடும்பொரிமுளகு நீரோடன்னம்
பக்குவமாய்பத்தியமுங்கார்த்திடாயே. 317

நீரிழிவுக்குமருந்து.

கார்த்திடுபூவங்கிவடவேர்ப்பட்டை
கதண்டுதேன்விட்டரைத்துயிருபொழுதுந்தான்
பார்த்திடுபாக்களவுயெழுபொழுதுங்கோப்
பறந்துபோம்நீரிழிவுபுளியுந்தள்ளு
சிவந்தசிவவிலையுங்கூட்டிட் திறமாகவிடுத்துகளிக்
கிண்டிவாங்கி மாத்திடுயெள்ளெண்ணெ
யிருபொழுதுந்தான் மாறுமல்
தோய்த்திடுநாள்முளகிற்கொள்ளே. 318

பிரமியத்துக்கு.

கொள்ளவேபிரமியமெட்டகன்றுபோகும்
கூடாதுவுப்புபுளிபுகையுந்தள்ளு
மெள்ளவேயிளவெந்நீர்சாதங்கொள்ளு

மீருதேபாய்மிதியோன்ருகாதாகா
துள்ளவேமெய்யசைவுநடையொன்ருகா
துத்தமனேகதிரொளிவாயோசையாகா
தள்ளவேயென்குருவின்முறைபொய்யாது
சாதிக்கநோய்பலவுந்தவறிப்போமே. 319

## பிரமியகடுப்புக்குமருந்து.

போமடாபசுவின்பாலாழாக்கொன்றில்
பூவந்தியிலையீருள்ளியிம்மூன்றுங்கூட்டி
ஆமடாயிடித்துரசம்பிழிந்துவாங்கு
அப்பனேநாள்மூன்று அடுத்தேகொள்ளு
தாமடாபுளிபுகையுப்பதுவுந்தள்ளு
தப்பாதிப்படிமறுபத்தியமேகாரு
தாம்டாமிரமியமெட்டதுவுந்தீருந்
தவருதுயென்குருவின்முறைபொய்யாதே. 320

## நீர்கடுப்புக்குமருந்து.

பொய்யாதுபூவந்திவடவேர்பட்டை
புத்திரனேவெந்நீர்விட்டாட்டியாட்டி
செய்யாதுநாள்மூன்றுயிருபோழ்துங்கொள்
சிவசிவாநீர்க்கடுப்புத்தீரும்
மெய்யாதுபுளிபுகையுப் பதுவுந்தள்ளு
மேலானவெந்நீரிற்சாதங்கொள்ளு
தெய்யாதுயென்குருவின்முறைதானப்பா
சூட்சமிதுயிம்மருந்தைசெய்துபாரே. 321

## மேகம்-(உக)க்கு அமிர்தலேகியம்.

பாரப்பாவால்மிளகு பலந்தானென்று
பாங்கானகசகசாபலந்தான்ரண்டு
சேரப்பாசட்டிபொன்று யடுப்பிலேற்றித்
தீமூட்டிபொன்னிறமாய்வறுத்துவாங்கி
சேரப்பாகல்வத்திற்பொடியாய்செய்து
நெதியடாபசுவின்பால்பலமோரெட்டு

ஆரப்பாசீனியெடைபலமோநாலு
மைந்தனேபாகுபிடிதானேபோடே. 322

நீர்சுருக்குக்கு.

போடடாநெய்பலமொன்றரைதான்விட்டு
புத்திரனேலேகியம்போற்கிளரிக்கொண்டு
நாடடாபாக்களவுயிருபோழ்துந்தான்
நழுகாமலிரைந்துதினமேகொண்டால்
சாடடாயெழுமூன்றுமேகந்தன்னை
தவறாதுயென்குருவின்முறைபொய்யாது
தேடடாபத்தியந்தானுனைவாறுமில்லை
செய்திடவேநொய்பலவுந்தெறித்துப்போமே. 323

போமடாயிருமூன்றுயீருள்ளிச்சாறு
புத்திரனேபலமூன்றுகளக்கொட்டிச்சாற்
தேமடாயெள்ளெண்ணைபலமோறு
சேர்த்திடுமிந்தப்படியேதினமோறு
நேமடாபத்தியமொன்றுகாதப்பா
நேர்த்தியாய்வென்னீரோடன்னங்கொள்ளு
ஆமடாநாச்சுறுக்குமேகவெட்டை
யப்பனேநீரெரிச்சலகலுநேரே. 324

மேகக்கிரந்திகள்ளிக்கிரந்திபரங்கிப்புண் மோக்கிரந்திக்குமருந்து.

நேருணுயிலைச்சாற்பலமோமூன்று
நீங்காதயீருள்ளிரசம்பலமோமூன்று
வாருயெள்ளெண்ணையெடைபலமோறு
மாறமலோராறுதினமேகொண்டால்
பாருமேகக்கிரந்திகொறுக்குமாந்தை
பரங்கிப்புண்கள்ளிமலர்க்கிரந்தியோடும்
தீருமேவுப்புபுளிபுகையுந்தள்ளு
சேர்த்திடீர்வென்நீரோடன்னங்கொள்ளே. 325

கொள்ளப்பாமூஞ்சூர்நீரதிலேவிட்டு
குதித்தாவிநீஞ்சிடும்போயிருதுண்டாக

மெள்ளப்பாகத்தியினல்வீசிப்போடு
    மிதந்ததுவுமுழுகினதும்வெவ்வேறகண்டு
தள்ளப்பாடசுஞ்சாணங்கவசஞ்செய்து
    தவருமல்புடமிடவேநீறிப்போகும்
விள்ளப்பாபரணையீனிற்பிரிவாய்தைத்து
    மெல்லியலாகொங்கையிலேதடவிப்பாரே. 326

## பெருவயிற்றிற்குமருந்து.

பாரடாயமூந்தியதுண் டத்தின்பற்பம்
    பாங்காகப்பூசிடவேசுருங்கிப்போகும்,
வேரடாமிதந்துண்டைத்தின்பற்பந்தன்னே
    மேலிட்டுப்பூசிடவேகறுத்துகாணும்
மாரடாயிப்படிதான்செய்துபாரு
    மநீத்தானயென்குருவின்றிறைபொய்யாது
காரடாசிவசத்திபூசைதன்னே
    யெப்போதுமறவாதுசாதிப்பாயே. 327

சாதியடாபேயகத்திக்காய்நாழிதனி
    மேதைக்கோமியநாழிவிட்டுச்
சோதியடாசாமமுமொன்றடுப்பிலேற்றி
    சுவரவேயவித்துடனேயுலாத்திக்கொண்டு
ஆதியடாவெள்ளாட்டுப்பாலாழாக்கு
    அப்பனேகாய்மூன்று அரைத்துள்ளீய்ந்து
வீதியடாரண்டாநாள்காய்காலாட்டி
    முன்போலேபாலிலிழைத்துள்ளுக்கேற்றே. 328

## இருமலுக்கெண்ணெய்.

ஏற்றப்பாமூன்றுநாள்காயைந்தாட்டி
    யிதமாகமுன்போலேபாலிற்கொள்ளு,
மாத்தப்பாயிம்மருந்துவயிற்பேதிக்கு
    மாறுமல்பலவகையந்திலேகட்டு
பாத்தப்பாவுழலையொடு தவனமானல்
    பருப்பாலினெய்முருங்கை யிலையும்போட்டு

சேர்த்தப்பாகரச்சியிறுத்திப்படி
கொண்டால் தீராதபெருவயிறுதீரும்பாரே. 329

பாருயெள்ளுயெண்ணெயெடைபலநாலேந்து
பரிந்ததடாதோடைச்சாற்பலம்நாலேந்து
சேருதூதுவளைச்சாற்பலம்நாலேந்து
திறமான யாந்தகரைச்சாற்பலம்நாலேந்து
மாருதேத்தான்விரையாறைந்தாட்டி
மைந்தனேமெழுகுபதம்மெரித்துவாங்கி
நேருதிப்பிலிகடுக்காய்வகையொன்றுக்கு
நிறைமூன்றுகாசிடையும்பொடித்துக்கூட்டே. 330

புரைக்குழலுக்கவிழ்தம்.

கூட்டப்பாதேனதிலேபலமோரைந்து
குறையாமற்பரிதிபுடம்புனியின்மேல்வைத்து
மாட்டப்பாபலமரைதானிருபோழ்துந்தான்
மைந்தனேயிரண்டுநாள்மகிழ்ந்துண்டாக்கால்
போடப்பாகுத்திருமல்விலகிப்போகும்
புகழானயென்குருவின்முறை
பொய்யாது நாடப்பாபுளிபுகையுந்
தள்ளிப்போடுதவறுதுசாதிப்பாயே. 331

சாதியடாகதலிப்பட்டை சாறுகட்டு
சாம்பலாச்செய்துடனுமணக்கெண்ணெய்
பேதியடாவிட்டுடனொருவிரலாலாட்டி
புரைகமலேமீதிலிட்டாபுடைந்துபோகுஞ்
சோதியடாயிம்மருந்தைசெய்துபாரு
சொல்லரிதுயென்குருவின் முறைபொய்யாது
வீதியடாபுளிபுகையுந்தள்ளிப்போடு
மேலானமிளகுடன்னீர் விரும்பிக்கேளே. 332

நிலையாவாரைச்சூரணம்.

கொள்ளப்பாசமூரிசம நிலையாவாரை
குறுகரிந்து நிழலதனிலுலர்த்திக்கொண்டு

தெள்ளப்பாயிடித்துவெரு கடிப்பிரமாணம்
சேர்த்திடுமெண்டலமிருபோழ்துதேனிற்கொள்ள
உள்ளப்பாசடமெலிந்துவா தந்தீரு
மோராவினெய்யினில்மண்டலமேகொண்டால்
மெள்ளப்பாசலம்பெருத்து அழகுண்டாகுமீறுதே
பாய்மிதியல்விளங்கப்பாரே. 333

பாரடஆமணக்கெண்ணெயதில்நாளாறு
பக்குவமாய்கொண்டுயெலி விஷங்கள்தீரும்
தேரடாசிறுநீரிலேழுநாட்கொள்ளத்
திருமேனிபுழுமரிக்கும் புகையுந்தள்ளு
ஊரடாமெண்ணை தனில் கொண்டாயானல்
வுத்தமனேகால்கடுப்புளனைத்துந்தீரும்
மாரடாபசுமோரிலேழுநாட்கொள்ளவாங்கு
செறியாங்குணமுந்தவறிப்போமே. 334

போமடாசோற்றுநீரேழுநாட்கொள்ள
பொரிந்துபோஞ்சொரிகிரந்திப் புளியுந்தள்ளு
ஆமடாநாளேழுவெல்லாட்டுப்பாவி
லப்பனேகொண்டிடவேசெவ்வாப்புத்தீரும்
நேமடாமேதைச்சாணத்தில்நீரில்
நிலையாகமண்டலந்தானிருபோழ்துங்கொள்
சாமடாவிஷபாகம் பாண்டுரோகந்
தரியாதுபெண்மயக்கந்தள்ளிப்போடே. 335

## கால்கையிடுப்புதோண்டைவாதங்களுக்குத்துளிதம்.

போடப்பாஆட்டாங்கொடிச்சார்தன்னிற்
பூசித்துமண்டலந்தானிருபோழ்துங்கொள்
ஆட்டப்பாஅழிகுஷ்டம்பொரிந்துபோகும்
மப்பனேபுளிபுகையுந்தள்ளிப்போடு
கூடப்பாபாகையிலைச்சாறதினுள்மூன்று
கொண்டிடச்செய்செய்யான்கடிபோம்புளியுப்பில்லை
தேடப்பாமண்டலங்காலெருமைப்பாலில்
சிக்கடிவிஷமறுஞ் சத்தியமாய்மூட்டே. 336

மூடப்பாமிளகுள்ளி வகையொன்றுக்கு
வாங்குபலங்காலெடைதானெரித்துப்போட்டு
நாடப்பாயடுப்பேற்றி யனலைத்தாக்கி
நாலொன்ருய்க்காய்ச்சியிறுமுத்தெண்ணெய்தாளி
தீட்டப்பாவடிகட்டி யிருத்துக்கொண்டு
நினைவாகமுன்போலசெய்துக்கொண்டு
ஆட்டப்பாநாண்மூன்றிப்படியேகொண்டால்
அப்பனேபேதிநித்த மாகும்பாரே. 337

பாரடாமெய்பதங்கைகுடைச்சல்குத்தல்
பருந்தொண்டைவாதமிடுப்பின்வாதம்
சேரடாபொரிமிளகுநீரோட்டன்னஞ்
சேராதேபுளிபுகையுந்திரோதாய்மாய்கை
காரடாபத்தியமொன்ருகாதாகாகை
கண்டதாளிதமாங்கருதிப்போற்றி
நேரடாவென்நீரினுள்மூன்றுக்கு
நில்லரிதுநோய்கலுமறிந்திடாயே. 338

## அண்டவாதத்துக்குமருந்து.

அறுந்திடுமுடக்கொத்தான் பலந்தானென்று
ஆமணக்கெண்ணெயிருகழஞ்சுசுத்தி
யெரிந்திடுமடுப்பேற்றிவத்திகொண்டு
யிருகழஞ்சுமிளகுநற்சீரகமுங்கூட்டி
தெரிந்திடுமயனம்போலெரிந்துவாங்கி
சிவசத்திபூசைசெய்திருபோழ்துந்தான்
விரித்திடுமண்டலமிப்படியேகொண்டால்
மீறியதோரண்டத்தினவாதம்போமே. 339

## நீர்க்கடுப்புக்குபவனிவாய்க்கடுப்புக்குகியாழம்.

போடாசிறுகீரைநெஞ்சிக்கன்னி
பீளைகற்ருழை நாயுருவிதுததி
ஆமடாவகைக்கழஞ்சிரண்டு
அப்பனேசீரகங்காற்பலமுங்கூட்டி
வாமடாநற்சலமீராழரக்குவிட்டு

மாறுமற்காச்சியிறுத்தாழாக்கொன்றில்
தாமடாநெய்பலங்கால் வெண்கற்கண்டு
சமனாகப்பொடிசெய்முன்னீரிற்சேரே. 340

சேரப்பாயிந்நேரம் நாளாறுகொள்ள
சிவசிவாநீர்சுருக்குமுயெரிச்சல்பித்தம்
பாரப்பாகைகால்மெய்யசதிசோமபல்
வபனிவாய்க்கடுப்பன்றபதவிட்டோடும்
வேரப்பாதீரோதாயிமாய்கைதள்ளு
வைய்யில்நடையாகாகாவோசையாகா
தூரப்பாபுளிபுகையுங்கருத்தூணு
மற்றொருந்தித்துவெந்நீருடன்னங்கொள்ளே. 341

சித்திரபல்லாதி.

கொள்ளடாஆமணக்கெண்ணெய்படிதானென்று
கூடச்சேர்செம்பருத்தச்சாறுழாக்கு
உள்ளடாநேர்வாளம்பூரமேல்
முத்தமனேவகையொன்றுக்கழஞ்சிரண்டு
மெள்ளடாகிராம்புகழஞ்சிடைதானென்று
முன்சரக்குசுத்தியெல்லாம்பொடித்துப்போட்டு
தள்ளடாகதிர்புடம்பத்திருநாள்வைத்து
தவறுமற்கசமுகனைப்போற்றிடாயே. 342

போற்றப்பாவெள்ளெண்ணெய் பலந்தானென்று
புகட்டுமண்டலமரைதான்பிடிப்புவெள்ளை
ஆற்றப்பாகிரந்திபுண்கொருக்குமாந்தை
அப்பனேயரையாப்புகுடைச்சல்தீரும்
மாற்றப்பாபுளிபுகையுந்திரோயிமாய்கை
மாறுமல்வெந்நீருமன்னங்கொள்ளு
காற்றப்பாகதிரொளுவாயோசையாகா
கனமானநடையாகாதறிந்திடாயே. 343

அறிந்திடாய்கொடிவேலிசிவனார்வேம்பு
அமுக்கறுவெள்ளறுகுசங்கங்குப்பி
தெரிந்திளாயாகாச கெருடன்சங்கு

சின்னிவிலாத்திருமூள்வேர்செங்கத்தாரி
பரிந்திடாய்வெட்பாலை வித்துகுன்னி
பாங்கானமளகருணை யூமலாத்தி
விரிந்திடாய்பிரம்பிண்டித்தூணிரொட்டி
வெள்ளெருக்குப்பூதகரப்பானுங்கூட்டே. 342

கூட்டப்பாவாதகரப்பானின்பட்டை
காட்டுச்சீரகங்கருஞ்சீரகமுந்துத்த
மாட்டப்பாசூதமொரிதுரிசிகெந்தி
வகையொன்றுபலமாகநிறுத்துவாங்கு
கூட்டப்பாபலமெட்டுபரங்கிப்பட்டை
குமுறவேயிடித்துடனேவடியிட்டே பின்
நாட்டப்பாகாரெள்ளுபலமோரெட்டு
நலமானமுதிர்சேராங்கொட்டைநாறே. 353

நூலடாஅவித்துடக்குமுளையைப்போக்கி
நுண்மையாயுதகந்திற்கடிகையைந்து
மாறடாயூறியபின்னெடுத்துக்கொண்டு
மைந்தனேசிறுபயறுபோலேகொய்து
பாரடாவிதிர்ந்ததொருதேங்காய்நெத்து
பாங்காகவுடைத்துரண்டுந்திருவிப்போட்டு
சேரடாபனவெல்லம்பலமோரெட்டு
திறமானமருந்தெல்லாங்கூட்டே. 344

இட்டடாகைத்திறமாயிடித்துவாங்கி
யீசனார்சுதனானைமுகனைப்போற்றி
தொட்டடாதூபமொடுதீபங்காட்டி
சொற்பெரியசித்திரவதலாதியாகு
யாகுமாட்டப்பாபாக்களவுயிருபோழ்துந்தான்
மாறுமல்மண்டலமொன்றதுவேகொண்டால்
காட்டடாகிரந்திசொரிகிரந்திசூலை
கடப்புகைசால் பிடிப்புத்திமிரைப்புமேபோமே. 345

போமப்பாகையூறல்வெளுப்புமேகம்
புகழுவெட்டுக்கடிவாதவிஷங்கள்குஷ்டம்

ஊமப்பாசுடமெலிவுவெடித்தல்கிறல்
அத்திநுணுக்காய்க்கிரந்தி பரங்கிப்புண்ணு
தாமப்பாபோகத்தி கடுமேறுக்கிராந்தி
சாதிக்கநோய்பலவுந்தவறிப்போகும்
நாமப்பாபத்தியந்தான் சொல்லக்கேளு
நல்லப்பாசிறுபயறு துவரைபருப்புசேர்த்தே. 346

## முகத்தில்வங்குக்குமருந்து.

சேர்த்திடுவழுதலங்காய்முருங்கைப்பிஞ்சு
தூதுவளைக் கீரைசுண்டை
யேர்த்திடாய்பசுவின்பால் தயிரோநெய்யும்
எரிவிராலகுரவைவெள்ளாட்டுவற்றல்
பார்த்திடாயாமணக்கெண்ணெய்தேய்த்து
பாங்கானவெந்நீரிற்சீய்க்காய்மூழ்கு
வார்த்திடாபூஷ்ணமணி மிகுந்துதானல்
மருந்தப்பாகிறுத்துப்பின்னெடுத்துக்கொள்ளே. 347

கொள்ளவேயரிதாரம் பளிங்கிவாங்கு
குறையாமற்பலமரை தானிரையொருகட்டி
உள்ளவேநற்சோகவச்சாற்றைவாங்கி
புரவாகயிழைத்துவழித் தெடுத்துக்கொண்டு
மெள்ளவேவை யந்திருநாளிருபோழ்துந்தான்
விளங்கவேயடுத்தடுத்துப்பூசும்போது
துள்ளவேதிருமுகத்திற்படரும்வங்கு
தொங்கித்துகில்லரிது துலைந்துபோமே. 348

## காதிரைச்சல்குத்துல்எழுச்சிசெவிக்குத்தயிலம்.

ஆமடாயெழுச்சியொடுமண்டைநோய்களணுகாமற்
போமதற்குத்தயிலஞ்சொல்வேன்
ஏமடாயெல்லெண்ணெய்படிதானென்று
பிதமாகமூங்கைப்பூபலந்தானென்று
தாமடாவேங்கைப்பூபலந்தானென்று
தனியானமிருங்கைப்பூபலந்தானென்று

சோமடாநாகப்பூமுடக்கொத்தானுஞ்
சொல்வீரெள்ளெண்ணெயிலேபோடே. 349

போடப்பாகுளவிந்தம் பலந்தானென்று
புகாான நல்மிளகுபலந்தானென்று
போடப்பாவலம்புரிக்காய்கழஞ்சியொன்று
பொன்னனவதிமதுமரங் கழஞ்சியொன்று
போடப்பாதக்கோலங் கழஞ்சியொன்று
பொற்றேவதாரமிடைகழஞ்சியொன்று
போடப்பாசடைக்கஞ்சாகழஞ்சியொன்று
பொடித்திதிடுவாய்மருந்தெல்லாமெண்ணெய்க்குள்ளே. 350

எண்ணெயிதுபதமாகவடித்துக்கொண்டு
இதமாகவருஷமொன்றரைதான்மூழ்க
எண்ணெயிதுசெவிக்குள்ளேவிட்டுத்தாக்கு
யேகுமேகாகிரைச்சல்காதுமந்தம்
எண்ணெயிதுசெவிநோய்களெல்லாம்போச்சு
யிசைகேளாச்செவிநோய்கள்தீரும்பாரு
எண்ணெயிதுயன்றியொருசோதிகேளு
யெள்ளெண்ணெய்படிகாலின் சொல்லக்கேளே. 351

## செவிநோய்க்கெண்ணெய்குடசல்.

## வேறு.

சொல்லுறேனிலப்பனையுங் கிழங்குவாங்கி
சோராமலரைப்பலந்தானரைத்துப்போட்டு
மல்லுறேன்பதமாகவடித்துக்கொண்டு
மடக்கநாள்பத்துடனேதேய்த்துவாநீ
யல்லுறேன்சித்திரமூலத்தின்வேர்தோ
லரையாதேகழஞ்சொன்று மூலப்பாலாட்டியே
வெல்லுறேனெள்ளெண்ணெய்படிகாலுக்குள்
விளங்கவேகரைத்திட்டுப்பதந்தில்வாங்கே. 352

வாங்கியேசிரசுக்குநித்தந்தேய்ப்பாய்
மண்டலத்திச்செவிடுநோய்வாங்கிப்போகும்

தாங்கியேயின்னமொரு சொல்லக்கேளு
    தளியாதேகொள்ளுக்காய் கொழுஞ்சிவேர்த்தோல்
பாங்கியேகழுஞ்சியொன்றுமுலைப்பாலாட்டி
    பார்யாழாக்கென்னெணயினி பதத்திலேதான்
தாங்கியேதிரியாதேவடிபாகத்திற்
    சோதித்துத்தாக்கருவாய்துளிதானஞ்சே. 353

அஞ்சமேசெவித்திரியவிலடையநோய்க
    ளடைப்புவிடுஞ்சுத்திபண்ணிவாயுவேகம்
பஞ்சுபோற்பறந்துதடாநோய்களெல்லாம்
    பாழானகாதிரைச்சலெங்கேபோச்சு
மிஞ்சுமேகபாலத்திற்சூடுபோச்சு
    வேதனைகள்செய்கின்ற வாய்வும்போச்சு
வஞ்சுமேநோய்மிகுந்த நீர்சதோஷங்க
    ளணுகாதுவில்வாதித்தயிலமூழ்கே. 354

## வில்வாதித்தயிலம்.

மூழ்கவேவில்வாதிபலமீரைந்து
    முரைமச்சிநன்னாரி நத்தைச்சூரி
யாழ்கவேயசுவகெந்திசித்தாமுட்டி
    யப்பனேபொன்முசுட்டைமுசுமைசிந்தி
வாழ்கவேமுருங்கைவெட்டிவிலாமிச்சம்
    வேர்வகையொன்றரண்டுபலம்வீதஞ்சேர்த்து
நீழ்கவேயிளநீர்ற்படிதானெட்டு
    ரோகம்பசுவின்மோர்பலமோரெட்டே. 355

எட்டாகுப்படிபுளித்தக்காடிகூட்டி
    யிதமாகவோதரித்து யிடித்துப்போட்டு
கட்டாகத்திரிகடுகுசிவதையோமங்கார்
    கோலுங்கஸ்தூரிமஞ்சளோடும்
இட்டாகஅரத்தைசிறுதேக்கினோடியிரு
    சீரகத்தனெலவங்கமஞ்சள்
மட்டாகபிலவங்கஞ்செவியம்பத்திடு
    மரமஞ்சள்திப்பிலிமூலத்தினோடே. 356

மூலந்தான்முன்மாநங்குயீரைந்தொன்று
மூட்டுவாய்வகையொன்றுகழஞ்சியொன்று
நாலதாயிடித்ததனைகூடப்போட்டு
நன்றாகபதினென்றாய்க்காச்சிவாங்கி
பாலகாநான்குபடி யெள்ளெண்ணெய்
படிரண்டுபழச்சாறுபடிதானென்று
சீலதாய்சிறுகீரைப்பொன்னாங்காணி
சீதேவிசெங்கழுநீர முசுக்கைத்தானே. 357

தானானவகையொன்றுவுழக்குச்சாறு
சதிராகவடித்தெண்ணெயிலேவாரு
பானைதிரிபலையுந் தேவதாரி
பகர்கோஷ்டப்வங்காளப்பச்சையோடு
வேனைகிராம்புவாழைக்கிழங்கு
வெள்ளிச்சிவெண்பாடம்செண்பகப்பூ
தானைமருக்கொழுந்து பன்னிரண்டு
கைம்முறையாய் வகையொன்றுகழஞ்சிரண்டே. 358

ரெண்டானவகையெல்லாமைபோலாட்டி
நேராகநாகமல்லிச்சாற்றினாலே
பண்டானயெண்ணெயிலேகரைத்துவாரு
பருவமாய்மெழுபதமாகும்போது
கண்டானகோரேசினைகுங்குமப்பூ
கற்பூரம்புனுகுசட்டங் கலசத்துள்ளாய்
கொண்டிடவேவடித்ததனை நெற்பானைக்குட்
குணமாகமண்டலந்தான் குறிப்பாய்வையே. 359

யகாசந்தனாதித்தயிலம்.

குறிப்பானவில்வாதித்தயிலஞ்சொன்னேன்
குணமாகுநோயெல்லாந் தீரவேதான்
மறிப்பானவாதபித்தஞ்சிறேற்பனந்தான்
மைந்தனேகபாலத்திற்சூடுபோகும்
வெறிப்பானபீனிசங்கள் சயமேகங்கள்
வெட்டையொடுவூஷ்ணத்தின்வாய்வுதீரும்

தெறிப்பான சிரசுநோயெல்லாந்தீருந்
 தீராதவரோசிகங்கள்தீர்ந்துபோமே. 360

போமடாயிருபத்தோர்மேகமெல்லாம்
 போவதற்குமகாசந்தனாதிசொல்வேன்
ஆமடாமலாக்காயின்சந்தனந்தான்கேளு
 மடவாகயிடித்தபொடி பலந்தான்பத்து
நாமடாநன்னாரிங்கைச்சூரி
 நாயுருவிசெட்டிவிலாம்பிசிதிசிந்தி
தாமடாயிருவேலிமுத்தக்காசு
 தருமதுரமமுக்கராவேருந்தானே. 361

தானென்றசந்தனகிலாம்பரக்கந்தஞ்
 சதாவேரிகூவிளைவேர்தேவதாரம்
ஏனென்றசாரணைவேர் மாதுளங்கொட்டி
 யிலவங்கம்பத்திபுங்கருவரப்பட்டை
வாளென்றதக்கோலம் லவங்கபட்டை
 வகையொன்றுபலமொன்றுயிடித்துப்போட்டு
பானென்றபரணியொருதூணிநீரிற்
 பாங்காகச்சீரொட்டொன்றாகக்காச்சே. 362

காய்ச்சியேவடித்தெண்ணெய்படியோநாலிற்
 கலந்துவிடுமுசுமுசுக்கைநெல்லிக்காயும்
தாச்சியேசாறுபடியொன்றேவீதந்தான்
 வீதந்தான்வார்கையாந் தகரைப்படிச்சார்விட்டு
மாச்சிதேவல்மிளகு கோஷ்டஞ்சுக்கில்
 வங்காளப்பச்சையும்பூலாக்கிழங்குல்
பாச்சிளேயரத்தையடாமாஞ்ம்யோமம்
 வகர்வெளுச்சி வெம்பாட்கமேலங்கரணை. 363

சீழ்மூலம்-இரத்தமூலம்-வயிற்கடுப்பு.

காணப்பாகொத்தமல்லி யபினிச்சாதிக்காய்
 கருஞ்சீரகங்கசச்போகசாதிபத்திரி
பூணப்பாமாசக்காய்செண்பகப்பூ

வுருகஞ்சாநாகப்பூ தானுங்கூட்டி
நாணப்பாகிராம்புகினியூறல்பட்டை
நற்சீரகங்கோரைக்கிழங்கு
பூணப்பாவகைகையொன்றகழஞ்சிரண்டு
பொருந்தமைபோலாட்டியேகரைத்துவாரே. 364

வாரப்பாபுங்கம்வேர்பாலாலாடடி
வளமானவெழுகுபதமானவாறு
சேரப்பாகுளிதாழிச்குள்ளேகேளு
சித்தமாம்புனுகுசட்டங்குங்குமப்பூ
கூரப்பாகோரோசினைபொடித்துப்போட்டு
குருபூசைகணபதியின் பூசைசெய்து
காரப்பாகொழுந்துபிச்சிபதத்திற்போட்டு
கைம்முறையாய்த் தப்பாமல்வடித்திடாயே. 365

வடித்திட்டதயிலமதுமூழ்கும்போது
வாய்வுமந்தஞ் சீழ்பால்மண்டைநோய்கள்
இடித்திட்டகபாலவலிநற்குவிடங்க
ளிருகண்ணேய்செவிநோய்களவெயர்வைதாரம்
துடித்திட்டபீனிசங்கள்தலைசுழற்றல்
தொந்தரோசிகம் விஷபாகங்கள்குன்மம்
அடித்திட்டசயமேகம்பிரமேகங்கள்
அனல்பீளைசோகைகவரட் சிபோம்பாரே. 366

பாரப்பயோமணர்கெண்ணெய்பலநாலைந்து
பழசசாறுயீருள்ளிச்சாற்கற்றாழைச்சாற்
மாரப்பாநல்மணச்சுக் காளிச்சார்
வகையொன்றுக்குயீரைந்துபலமேவாங்கி
சேரப்பாபலமாநற் சீரகந்தான்
திறமாகஆட்டியெண்ணெயிலேகூட்டி
கோரப்பாமெழுகுபதமெரித்துக்கொண்டு
கொதித்திடாபலமொன்று தினமார்கொள்ளே. 367

## ஆசனக்கடுப்புஉட்காச்சலுக்குஎண்ணெ.

கொள்ளடாதினகரனைப்பூசைபண்ணு
கூறியதோர்சீழ்மூலமிரத்தமூலம்

உள்ளடாகடுப்புஆசனக்கடுப்பு
உட்காச்சல் உள்மூலம்வெளிமூலம்போம்
மெள்ளடாபுகையுடனேபுளியுமுப்பு
மீறியதோராட்டிறைச்சிமடசம்கூட்டு
தள்ளடாதயிர்மோர்நெய்வெந்நீபன்னஞ்
சரதிக்கநோயகலுந்தெரிந்துபோடே. 368

## அறுவகைமூலத்துக்கெண்ணை.

போடுமுடக்கொத்தான்மூக்குரட்டை
காட்டுப்புகழ்கருணைக்கிழங்குமெருகங்கிழங்கு
தேடுகளக்கொட்டியொன்றுக்குச்சேர்
சேர்திடுவாய்பலபொன்றுமைபோலாட்டி
யாடுசித்தாமணக்கோடெண்ணெபாழாக்கைந்து
விடுமெழுகுபதமெரித்துவாங்கி
நாடுமேநிதமரைமண்டலமேகொண்டால்
நாடாதுஅறுவரைமூலம்போமே. 369

## மூலத்துக்குலேகியம்.

போமடாவெட்பாலையரிசியோமம்
பாங்கானகொடிவேலிமிளகுகாயம்
நேமப்பாசிறுமூலஞ்சிறுகாஞ்சோரி
நெரிஞ்சிவேரதிவிடையம்வெள்வெங்காயம்
சேமப்பாவில்வபத்திரிகடுகுயானைத்
திப்பிலிரோகணிபெருமரத்தின்பட்டை
யாமப்பா வகையொன்றுகழஞ்சியொன்று
வளமானஅத்திப்பூபலமுஞ்சேரே. 370

## முளைமூலத்துக்குச்சூரணம்.

சேர்த்திடுமைபோலேயரைத்திட்டேபின்
திறமானயெள்ளெண்ணெய்பலமாறைந்து
வார்த்திடாய்மெழுகுபதமெரித்துவாங்கி
மாறுமரப்பலமரைதானிருபோழ்துங்கொள்ள

பார்த்திடாய்சீழ்மூலம்ரத்தமூலம்
பற்றியதோர்முளைமூலம்பறந்திட்டோடும்
கார்த்திடாயிச்சாபத்தியமேசொன்னேன்
கவிச்சோடுயிறைச்சி புகைதள்ளிப்போமே. 371

போடுகருணைக்கிழங்குசுக்கு
புளிக்காணைகொடுவேலிமருள்கிழங்குகரணை
முட்டைநல்துளகுயேலரிசிதிப்பிலிபேரண்டை
யாடுவகையொன்றுபலமிரண்டுவாங்கி
யப்பனேசூரணஞ்செய்யரைப்பலந்தான்
தேடுநெய்யனுபானமிருபோழ்
துங்கொள் சிவசிவமுனே
மூலந்தெறித்துப்போச்சே. 372

## திமிர்பெருநோயூறல்குஷ்டம்வண்டுகடிபடலம்.

போச்சிதுசுக்கினிடைபலமோநாலு
புகழ்பெரியசே ம்பிடைபலமோரைந்து
பாச்சிதுதிப்பிலியின்பலமோரண்டு
பாங்கானயேலம்விராகனெடைரண்டு
ஆச்சிதுசாதிபத்திரிவிராகனென்று
அப்பனேபொன்னிறமாய்வறுததுவாங்கி
யாச்சிது யிடித்துசூரணமேசெய்து
வடித்திட்டுதேனிலீராறுபலமுங்கூட்டே. 373

கூட்டிடாலேகியம்போற் கிட்டிக்கொண்டு
கொடுத்திடுவாய்பாக்களவுயிருபோழ்துந்தான்
மாட்டிடா யீரைந்து தினமேகொண்டால்
மைந்தனேசீழ்மூலம்ரத்தமூலம்
காட்டிடாய்வெளிமூலம் உள்மூலம்போங்
கணத்ததோர்முளைமூலங்காணுதோடும்
முட்டிடாய்பத்தியந்தானென்றுமில்லை
முதிர்ந்ததோர் தேங்காயுந்தள்ளிப்பாரே. 364

பாருவிளாவேம்புபுளியழிஞ்சிக்கொன்றை
பாங்குபெருங்குமிளங்காலிவாகைசேரு

மாகிலுகிலுப்பைச்சிவனார்வேம்பு
தேங்காயொடுபட்டைவகைபலமாறைந்து
வேருசேராகோட்டையெட்டிவித்து
வெள்ளாட்டுப்புழுக்குவகைபலமாறைந்து
நேருசெங்கல்கோஷ்டம்பலமோரைந்து
நெடுநாபிபலமூன்று நிறுத்துவாங்கே. 375

வாங்கிடுகுழித்தயிலங்கழஞ்சிரண்டு
மண்டலமோரரிசிபொரி மாவுந்தேனுஞ்சீனி
யோங்கிடுமிருபோழ்துயிப்படியேகொண்டா
லுத்தனேசடமெங்கும்தயிலம்பூசி
நீங்கிடுத்திமிர்பெருநோயூறல்குஷ்டம்
நில்லரிதுவண்டுகடி படலந்தீரும்
பாங்கிடுபத்தியம்நோயறிந்துகூட்டுப்
பாய்மிதியப்போகாது பார்த்திடாயே. 376

## இதற்குகுழித்தயிலம்.

பார்த்திடாய்சூதமிடைகால்கழஞ்சு
பாங்கானகெந்தியிடையரைக்கழஞ்சி
சார்த்திடாய்வாளமிடைகழஞ்சியொன்று
சதுரக்கள்ளிவித்திடைகழஞ்சிரண்டு
ஆர்த்திடாயெலிசாசங்கழஞ்சிமூன்று
ஆமணக்கின்முத்தினிடை கழஞ்சுநான்கு
சோத்திடாய்சேங்கொட்டைகழஞ்சியைந்து
சிவதைவேர்ஞ்சி யிடையாறங்கூட்டே. 377

## சகவுரோசனம்.

கூட்டப்காமுருக்கின்விரைகழஞ்சியாறு
குணமானயிலைக்கள்ளிச்சாற்றாலாட்டி
மாட்டப்பாதேங்காயுள்மருந்தையெல்லாம்
வைத்துடனேகெசப்புடம்போட்டெடுத்துவாங்கி
நாட்டப்பாகவசத்தையுடத்துகேளு
நலமானமருந்தெல்லாம் பரணிக்குள்ளே

ஊட்டப்பாவுத்தியிலுந்தடவிப்பேதி
யுத்தமனேகழுவிவிடிற் கட்டிபோச்சே. 378

## கைகால் கண்ணெரிவுபுகைச்சலுக்கு நெல்லிக்காய்தயிலம்.

போச்சடாவுள்ளங்காலதனிற்பூச
போகுமேவயிற்பேதி யொழியாமற்ருன்
பாச்சடாநற்சலந்தாற் கழுவிப்போடில்
பந்திக்கும்பேதிபத்தியந்தானில்லை
தேச்சடாயிம்மருந்தை புஷ்பந்தன்னைச்
செண்டுகட்டிமுகர்ந்திடவே வயிற்பேதிக்கும்
ஆஞ்சடா குளிர்ந்தசலமுகத்தில்வீச
அப்பனேபேதிகட்டுமறிந்துகொள்ளே. 379

கொள்ளப்பா நெல்லிக்காய்பொன்னுங்காணி
குமரிசிறுகீரையொடு கரிசலாங்கண்ணி
விள்ளப்பாளுதிவட்டமலர்கம்மாரு
வெற்றிலைமுசுமுசுக்கை யிளநீராவின்பாலும்
உள்ளப்பாவகைக்குச்சாருழாக்கொன்று
வுத்தமனேயெள்ளெண்ணெய்படிதான்விட்டு
தெள்ளப்பாகருஞ்சீரகபிளகுமல்லி
சீரகம்வகைக்குபரைப்பலமேதூக்கே. 380

தூக்கடாபொடித்துயெண்ணியிலேபோடு
சுண்டவேமெழுகுபதமெரித்துவாங்கி
தோக்கடாநெல்லிக்காய்த்தயிலந்தன்னைத்
தொங்கித்துச்சிரவுள்ளங்காலிற்றேய்த்து
நீக்கடாயாவாரை துளிர்சீயக்காய்
கரைத்திட்டுவொருமண்டலமேமூழ்கு
போக்கடாகைகால்மெய்யெரிவுபித்தம்
யுத்திரனே கண்ணெரிவு புகைச்சல்தீரே. 381

தீரப்பாசாதிக்காய் சாதிபத்திரி
திப்பிலிமூலமுக்கத்தாரிப்பட்டை
வேரப்பாவால்மிளகு விளங்கஞ்சுக்கு

வெள்ளறுகுமிளகுகருணை சங்கம்பட்டை
சேரப்பாகருஞ்சீரகம் லவங்கமோமம்
திப்பிலியுஞ்சிறுதேக்குத்தும்பராஷ்டம்
மாரப்பாவசம்புரேணு கங்குருசானி
வகைவைந்து கழஞ்சிடைபார்த்திடாயே. 382

## கருங்கோழிச் சூரணம்.

பார்த்திடாய்கொடுவேலி கழஞ்சேரைந்து
பரங்கிப்பட்டைகழஞ்சியிருநூற்றைந்து
மார்த்திடாய்சூரணித்துவடியிட்டேபின்
வளமானகருங்கோழிக்குள்ளேவைத்து.
சார்த்திடாய்சாதிக்காய் சதுரக்கள்ளி
பெருஞ்சட்டிக்குள்தாக்கிடாய்நாலுபடித்தண்ணீர்விட்டு
போர்த்திடாய்வேடுகட்டியதன்மேல்வைத்து
பொருந்தமேல்மூடிமண்சீலைசெய்யே. 383

செய்யிதுயளியவே வெந்துதானல்வாங்கு
திறமாகவிடித்துடனேயெலும்பைத்தள்ளி
வையிதுவுலர்த்திச்சூரணமேசெய்து
மைந்தனேதுட்டிடைதூக்கிருபோழ்துந்தான்
பையிதுமண்டலமிப்படியேகொண்டால்
வுத்திரஞ்சிலந்திகடிசூலைக்கட்டு
பொய்யிதுசொல்லவில்லைதெமிகெட்டோடும்
புத்தியாயிச்சாபத்தியமேகாரே. 384

## கோழிச்சூரணம்.

### வேறு,

காரப்பாகொடுவேலிபிரண்டைகாட்டுக்
கரணைக்கிழங்குமருள்கிழங்கு
வேரப்பாயிதையொடுகுக்குரட்டை
வெண்காக்கைப்புளிகரணைவகையொன்றுக்கு
பாரப்பாயீரந்துபலம்பொடித்து
பதக்குநீர்விட்டுக்குழம்பாய்க்காச்சி

சேரப்பாவாய்விளங்கஞ் கிராம்புகாயஞ்
சீரகந்திப்பிலிமிளகுசெவ்வியக்கூட்டே. 385

கூட்டுகருஞ்சீரகம் ரோகணிவெள்ளுள்ளி
கொடிவேலியசமதாகஞ்சிவதைசுக்கு
மாட்டுலவணபஞ்சமொடுபஞ்சசாரம்
வகையொன்றுகழஞ்சுரண்டு நிறுத்திவாங்கி
காட்டுவறுத்துப்பொடிவடியிட்டேபின்
கண்டிடாமுன்குழம்பில்பிசரிக்கேளு
நாட்டுகருங்கோழியதுவளமேசெய்து
நலமானமருந்துவயிற்றுள்ளேவைவயே. 386

வையடாயெருக்கிலே யீரேழைந்து
சுத்திவழுவாமற் கயிற்கொண்டுயிறுக்கிக்கூட்டி
மெய்யடாவிரிவானபெருஞ்சட்டிக்குள்
மீறியதோர்சதுரக்கள்ளி தறித்துப்போட்டு
பெய்யடாநான்குபடிசலத்தைவிட்டு
பிசகாமல்வேடுகட்டியதன்மேல்வைத்து
பைசடாசட்டிகொண்டுமேலேமூடி
பாங்காகமண்சீலே பரிந்துபோற்றே. 387

போற்றடாயளியவெங்கா லஸ்திபோக்கு
வாய்கைந்திரமாயிடித்துவாங்கி
ஆற்றிடாயுலர்த்திசூரணமேசெய்த
லப்பமேவதுட்டிடைதூக்கிருபோழ்துந்தான்
பார்த்திடாய்மண்டலமிப்படியேகொண்டால்
பற்றியதோர்வாய்வெல்லம் பறந்திட்டோடும்
கார்த்திடாயிச்சாபத்தியமேசொன்னேன்
கருங்கோழிச்சூரணங்கை முறைதானுட்டே. 388

## கண்கேட.

நாட்டுசுக்கிரவாரம் சோமவாரஞ்சோமவாரம்
நற்சதுரப்படமொழுகிகணேசன்வைத்து
சூட்டுமாமலராறுகுசிரசிலேதான்
கோறினகாணிக்கைதாம்பூலஞ்சாத்தி

காட்டுமுன்னண்டத்தைத்தீபமேற்றி
கையிலெடுத்தட்சதையுமேலேபோட்டு
கூட்டுச்சந்தேகமுள்ளபேரையெல்லாங்
கூறச்சொல்நாமத்தைக்குறித்துக்காணே. 389

காணுமந்திரம்படசுவாகாவென்று
கருத்தினிலொருதாஞ்சொல் முட்டையீய்ந்து
தோணுமைங்கரன்முன்னே பூசைபூசை
தூடியாகசெய்துமேபோடுபுட்பம்
பூணுபரிமுன்வலதுகாலின்கீழே
யோரடிதான்குழிக்கெல்லிந்தண்ணீர்விட்டு
பூணுமண்டந்தைய யதினுள்ளேபோடு
பொய்யாமல்செவிமந்திரஞ்சிட்டுசிட்டே. 390

சிட்டுசிட்டுஓம்அரிசிவாநவானந்தா
சிவரூபிதிட்டுதிட்டுமுட்டுமுட்டு
கட்டுகட்டுபட்டுபட்டு சுவாகாவென்று
கருத்தில்பனிரண்தரதஞ்சேவித்து
விட்டுவிட்டுமண்ணதின்மேற் போட்டுமூட
மிகுந்தநீர்விட்டுவாமூன்றுநாள்கண்
கெட்டுகெட்டுசேரார்வெளிப்படுவாரப்பா
கெல்லியெடுத்தண்டத்தையெரித்துபோடே. 391

## கண்ணிற்பூப்படலத்திற்குத்தயிலம்.

போடப்பாயெள்ளெண்ணெய் பலமோராறு
புகழ்ந்தநந்திவட்டமலர்பலமோராறு
தேடப்பாகிளாவின்மலர்பலமோராறு
சேருமிதரோகணிக்கால்பலமேதூக்கி
கூடப்பாமயனம்போலரைத்துப்போட்டு
கொதித்திடவேமெழுகுபதமெரித்துவாங்கி
நாளப்பாமண்டலமூன்றடுத்து மூழ்கநாடாதப்பூப்படலம்
நயந்துபாரேபொருகுமல்குடல்வாய்வுஅசீரணம்
அக்கினிமந்தம்புளியேப்பம்போகும்பாரே. 387

### உப்புசெந்தூரம்குன்மத்குமூலிகை.

பாரப்பாகறியுப்புபலமோரைந்து
பாங்கெருக்கம்பழுப்புச்சாற்விட்டேயாட்டி
சேரப்பாவில்லேதட்டி யுலர்த்திட்டேபின்
திறமானவறளியுமார்பிடந்தைபோடு
வேரப்பாயிப்படியேபுடமூமேழு
வெவ்வேறபோட்டிடவேசெந்தூரிக்கும்
கோரப்பாவிராகனிடைதேன்விட்டாட்டி
கொண்டிடுமூவேழுதினங்குன்மம்போமே. 398

போமப்பாவரவாய்வுபக்கச்சூலே
பொருமலுடன் குடல்வாய்வுகுடல்பிரட்டல்
ஆமப்பாகிரணவலியீஷ்ணவாய்வு
அக்கினிமந்தம்புளித்தேப்பங்கள்தீரும்
தாமப்பாபத்தியநோயறிந்துகூட்டு
தவறுது திரோதாயிமாய்கைதள்ளு
ஓமப்பாஅட்சரத்தைத்தியானஞ்செய்து
உத்தமனேசிவசத்திபூசைசெய்யே. 394

செய்யப்பாகொள்ளுக்காவேளேவேரிற்
றிறமாகப்பலமறைதானிறுத்துவாங்கி
பையட ாநாளேழுயிருபோழ்துந்தான்
பக்குவமாய்வாயில்மெண்ணிற்கிட்டாக்கால்
மெய்யடாவயிற்றுவலிகுன்மந்தீரு
மேலானயிச்சாபத்திசமேகாரு
பொய்யடாசொல்லவில்லே திரோதாயிமாய்கை
போக்குவாய் குருமூலிமதனனுமே. 395

### மதனசிந்தாதிலேகியம்.

மதனமிதுகாமேசுரவிந்தாதி
மகத்தானலேகியந்தானருமைமெத்த
சிதனமிதுகருணைமறள்விருகுங்கொன்றை
சீனியொடுமுள்ளங்கிவச்சிரவல்லி

இதனமிதுபுளிநடலையசுவமுத்த
    மிசைந்ததேத்தான்விரைப்படிகிழங்கு
பதனமிது சிறுகிழங்குவுள்ளியல்லி
    பனகொட்டிநெய்தலத்தியறகுயென்னே. 396

என்னமாதளை வித்துவுழுந்தோடெள்ளு
    இசைவானநற்பனையும்பூனைக்காலி
மின்னைநாயுருவிவிரைநத்தைச்சூரி
    மிறுகின்றநல்முருங்கைவிடாவேருந்தோல்
அன்னநீரமுள்ளிவிரைநெரிஞ்சில்வித்து
    அகத்திவித்துதகரவிரைப்பருத்திவித்து
சொன்னவூமத்தம்விரைகஞ்சாவித்து
    துடியான வில்வவிரைவிளாவத்தோடே. 397

வித்தானகதலிவிரை கொல்லன்கோவை
    யிறகுகுக்குடக் காந்தம்பிராயின்வித்து
சித்தானமுள்ளுவிரை நீலஞ்சோதி
    சிறுகீரைகொடிவேலிகிழ்க்காய்நெல்லி
கொத்தான வித்துப்பாகல் வித்தைக்கோலங்
    கொடுங்காட்டுக்கரணை நாரத்தைவித்தும்
கத்தானகூழ்ப்பாண்டம்வித்துநல்ல
    பழுபாகற்கருவேலின்வித்துவிதைம்பாரே, 398

பாருநீகோந்தமெல்லாஞ்சுத்தி
    செய்துபாலிலேயூறவிட்டு நான்காம்நாளிற்
சேருநீசலம்விட்டுகழுவிப்போடு
    சிறப்பாகவுலர்ந்தபின்புமருந்தோடாக்க
வேருநீவிரைக்கிழங்குவகையொன்றுக்கு
    வினைதீரபலமொன்றவீதஞ்சேர்த்து
தேருநீசூரணித்துவைத்துக்கொண்டு
    நிலையானசாதிக்காய்கிராம்புகூட்டே. 399

கூட்டுவாய்தாளிசபத்திரி சாதிபத்திரி
    குங்குமப்பூகஸ்தூரி கற்பூரந்தான
நாட்டுவாய்கசகசாசாரப் பருப்பு

நலமானகோரோசனைமிளகுசுக்கு
மூட்டுவாய்திப்பிலியுமதுரஞ் சீரகமுந்திரிகை
பேரீத்து அபினிவெண்காரம்
சூட்டுவாய்வால்மிளகு கெருடப்பச்சை
துடியானகல்நார்கல் மதமுமாமே. 400

ஆமென்றசலாசத்துவங்கபற்பம்
அப்புரேகப்பற்பமொடுதாம்பரபற்பம்
ஆமென்றரசபற்பம் வகையொன்றுக்கு
அடவாகக்கழஞ்சியொன்றுபொடித்துச்சேரு
ஆமென்றபற்பமுஞ்சூரணமுமொன்கொறாம்
ஐந்திடைக்குச்சீனியநபாகஞ்சொல்வேன்
ஆமென்றபொற்ன்றைபொற்கையானும்
அரவாகவெள்ளாட்டுப்பாலுங்கூட்டே. 401

கூட்டுவாய்தேங்காய்ப்பால் திருமேனிச்சாற்
குமரிசிறுபுள்ளடிசெருப்படைச்சாற்
மாட்டுவாய்தாழையுடவிழுதின்சாறு
வளமானசெவ்விளநீர் கூழ்ப்பாண்டந்தான்
நாட்டுவாய்நற்கதலிக்கந்தச்சாறு
நலமானபொடுதலைச்சாற்வகையொன்றுக்கு
காட்டுவாய்படிரண்டுசீனிகேளு
கைகண்டபலன்றானைம்பதுந்தான்போடே. 402

போட்டதனையாவாரை விறகுத்தீயைப்
போடுபதம்வருநோஞ்சூரணத்தை
போட்டதனைக்கிண்டிவாபாலந்தானென்று
பூநீறுகாற்பலந்தான்கூகைநீறு
போட்டதனைக்கிண்டிவரப்பலந்தானென்று
புகழிலாமிளகு பொடிப்பலந்தானென்றே. 403

ஒன்றாகச்சேகரித்துப்பதமாய்வாங்கு
உத்தமனேயாவினெய்ப்படிதானாலு
நன்றாகநற்றேனிற்படிதானாலு
நலமாகஅழிஞ்சிவேர்த்தயிலந்தானும்
நன்றாகப்படியொன்று கூடவாரு

வளமாகப்பதம்வந்துவாய்க்குங்காலம்
கன்றாகப்படிபூத்தோன் பூசைபண்ணுக்
கருணைசிறந்தாதிலேகியத்தைக்காணே. 404

மருந்துசாப்பிட நாள்.

காணவேநாள்பார்த்து பொருந்துநாளில்
கழஞ்சிகொள் ளிருபோழ்துகழஞ்சிரண்டு
நாணவேமண்டலந்தான் கொண்டாயானால்
நலமான அயக்காந்தசத்துந்தங்கம்
பூணவேபற்பமரைக்குன்றிவீதம்
புகழாகக்கொண்டுவரில்பிலந்தான்கேளு
லோணவேமூன்றுவகையத்தியிற்சூடு
சுண்டுதே மூலத்திற்சூடும்போச்சே. 405

போச்சுதேயபானனுடுசமானந்
தானும்பொறியான பிராணனுக்குபிலத்தவித்து
வாச்சுதேதண்டோசை நாடிவேக
மார்பனுக்கும்ரதிபோகம்வாயக்கலாச்சு
நீச்சுதேபுகனமென்னபிராணயந்தான்
நிலத்திலேபிலமென்னசிங்கஞ்சிங்கம்
ஏச்சுதேநோய்ச்சடலமெங்கேபோச்சு
யிவனைப்போலாண்பிள்ளையில்லைபாரே. 406

குமரிலேகியம்.

பாருக்குமரியைப்போ லென்றும்வாழ்கப்
பண்டாகக்குமரியுடத்தயிலஞ்சொல்வேன்
காருநீகன்னிச்சாற்படிதானாலு
கருவானசெவ்விளநீர்படிதானாலு
சேருநீபொற்கையானெல்லியல்லி
சிறப்பானசரிசாலைசாம்பிரந்தான்
வாருநீவகையொன்று படிதான்ரண்டு
மாட்டுவாயெள்ளெண்ணை படிதான்ரண்டே. 407

ரெண்டுதான்பசுவின்பால் நிறையவ்வீதம்

வண்டுதாமரைவளையம்சிறுநாகப்பூ
வசுவாசிவெட்டிவேர் அமுக்கராகிராம்பு
கொண்டுதான்கற்பூர மதுரமஞ்சள்
கூறுசிறதேக்கோடு திப்பிலியோரொன்று
கண்டுதான்கழஞ்சியொன்றுமைபோலாட்டி
கரைத்துபேதத்திலெரிததிறத்திக்காணே. 408

காணுமேதயிலத்தின்விருதென்சொல்வேன்
கரையடங்காநோயெல்லாங்கழன்றுபோகும்
தோணுமேசுரகாசந்தீருமாங்கை
துணுக்கிட்டவிக்கலொடு பிரமைபித்தம்
நாணுமேபிலட்சியங்கள்நேத்திரரோகம்
நாதியுறுமூலங்கள்வேர்வைதாகம்
ஊணுமேகெடுத்தரோசியங்கள்தானும்
ஊழ்வினையெல்லாமொழிந்துதா துண்டாச்சே. 409

### தாம்பரசுத்திசெந்தூரம்.

ஆச்சப்பாதாதுகெட்டுபிலமுங்கெட்டு
அயங்குலைத்தவாதியதாய்க்கபாலசூடாய்
வாச்சப்பாபோச்சென்று நோய்களெல்லாம்
வாதபித்தமையமொடுவாய்வுவேறாய்
நீச்சப்பாபெருவெள்ளம் நிலைக்கப்போமோ
நிலைப்பதற்குச்செந்தூர மொன்றசொல்வேன்
மூச்சப்பாமுருங்கைவேர்யுவர் கல்லுப்பு
முன்றுமொறுவிளாங்காய்போல் சமனையாட்டே. 410

ஆட்டியேதாம்பரத்துட்டொன்றுக்கு
அடவாகக்கவசஞ்செய்துபுடத்தைப்போடு
வாட்டியேபுடமூன்றிப்படியேபோட்டு
மைந்தனேமலராதே சொல்லக்கேளு
மூட்டியேமுருங்கைவிரைப்படிதானுலு
முழங்குமந்தவேர்ப்பட்டைபலந்தானுலு
காட்டியேகைம்முறையாய்த்தயிலம்வாங்கு
காரமிட்டுத்தாம்பரத்தை யுருக்கிச்சாயே. 411

சாயப்பாயீரைந்துதாமேயானால்
தவளம்போலதாம்பரஞ்சுத்தியாச்சு
வாயப்பாகட்டுதற்குவகையைச்சொல்வேன்
வளமானமால்தேவி சுத்திசெய்து
நீயப்பாதிருமேனிச்சாற்றாலாட்டி
நிசமாகயிருபத்துநான்குசாமம்
சேயப்பாபிறகுபழச்சாற்றால்சாமந்
திண்ணமாய்மெழுகுபதத்தினில்தான்வாங்கே. 412

வாங்கியேதாம்பரந்தானுருகும்போது
மால்தேவிமெழுகதனைத்தாக்குதாக்கு
தேங்கியேறுகியதுகட்டிப்போச்சு
சிறப்பாகயிந்திடைநிமிளைகூட்டி
பாங்கியேகண்டிடைக்குச்சூதம்வாரு
பதறாதேகண்டிடைக்கு கெந்திகூட்டி
போங்கிசேபொற்கையான் சாற்றாலாட்டி
புகழாகமூன்றுநாளரைத்துக்கட்டே. 413

கட்டியதோர்வில்லைதனைக்குகைக்குள்ளாகி
கட்டாகமேல்மூடி சீலைமண்செய்
எட்டியதோர்மணவரையிற் புடத்தைப்போடு
உண்மையுடனாறியபின்கல்வத்திலிட்டு
வெட்டியதோர்மறுகாலும் பொற்கையான்சாற்
விட்டரைப்பாயிருசாமம்வில்லைகட்டி
அட்டியதோர்முன்போலபுடத்தைப்போடு
அஞ்சுடமானபின்புவெளியிற்போடே. 414

போடப்பாசெந்தூர மாகுமட்டும்
புண்ணியனேபத்துபுடந்தானுமப்பா
ஆடப்பாஅருணநிறம்போலேயாகும்
